வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු





மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை



Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 26.12.2023 செவ்வாய்க்கிழமை | இதழ் : 360 | பக்கங்கள் : 12


# கோவிட் ஜே. என். - 1 பிறழ்வால் நாட்டுக்கு அச்சுறுத்தல் இல்லை!

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

### விழிப்பாக இருக்குமாறு மக்களுக்கு அறிவுறுத்து

கொழும்பு, டிசெம்பர் 26

**கோவிட் வைரஸின் உப பிறழ்வான ஜே. என். - 1 உலக நாடுகளில் அவதானிக்கப்பட்டுள்ளது. எனினும், நாட்டில் அதன் அச்சுறுத்தல் குறைவே. மருத்துவமனைகளில் பெறப் பட்ட மாதிரிகளின் ஆய்வில் இதுவரை எந்த உப பிறழ்வும் கண்டறியப்படவில்லை. எனினும் மக்கள் விழிப்புடன் செயல்பட வேண்டும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில்,

உலக சுகாதார ஸ்தாபனத்தால் கடந்த 22ஆம் திகதி கோவிட்-19 வைரஸின் மாறுபாடாக ஜே. என். -1 பிறழ்வு அறிவிக்கப்பட்டது. இது தொடர்பில் மேலும் ஆராயப்பட வேண்டும். சிறப்பு கவனம்

11



யாழ். மரியன்னை பேராலயத்தில் இயேசு கிறிஸ்துவின் பிறப்பை உலகினர் நினைவுறுத்தும் பாலன் குடில். (படம் லி. ஜெகன்)

## மார்கழி இசை விழா நாளை ஆரம்பம்!

யாழ்ப்பாணம், டிசெ. 26

மாபெரும் மார்கழி இசை விழாவும் வடக்கு மாகாணத்தை சேர்ந்த சிறிய, நடுத்தர உற்பத்தியாளர்களின் கண்காட்சியும் விற்பனையும் நாளை

11

## மதுபானத்தின் விலை உயர்கிறது

கொழும்பு, டிசெ. 26

ஜனவரி முதலாம் திகதி முதல் பெறுமதி சேர் வரி (வற்) 18 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால், மதுபான போத்தல் ஒன்றின் விலை 90 முதல் 150 ரூபாய் வரை அதிகரிக்கும் என்று மதுபான உற்பத்தி நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

எதனோல், வெற்றுப் போத்தல்கள், மதுபான லேபிள்கள் மற்றும் தயாரிக்கப்பட்ட மதுபானம்

11

## டெங்கு நோய் தாக்கத்தால் 11 மாத குழந்தை மரணம்!

யாழ்ப்பாணம், டிசெ. 26

யாழ்ப்பாணத்தில் டெங்கு நோயின் தாக்கத்தால் 11 மாதமே ஆன ஆண் குழந்தை ஒன்று நேற்று உயிரிழந்தது.

தாவடியை சேர்ந்த மதுரன் கிருத்திஸ் என்ற குழந்தையே டெங்கு நோயால் உயிரிழந்தது.

யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி குழந்தை உயிரிழந்தாக தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே, யாழ். போதனா மருத்துவமனையில் 25 வயது இளைஞன் ஒருவர் ஆபத்தான கட்டத்தில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இதேநேரம், யாழ். பல்கலைக்கழக மாணவி ஒருவர் டெங்கு காய்ச்சலுக்கு சிகிச்சை

11

### ஜனாதிபதி தேர்தலில்

## பொது வேட்பாளராக தமிழர் இன்னமும் தீர்மானமில்லை!

### இரா. சம்பந்தன் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 26

ஜனாதிபதித் தேர்தலில் எந்த கட்சியின் வேட்பாளரை ஆதரிப்பது? அல்லது தமிழ் கட்சிகளின் சார்பில் பொது வேட்பாளரை களமிறக்குவதா? அல்லது ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிப்பதா? என்பது தொடர்பில் இன்னமும் தீர்மானம் எடுக்கவில்லை. அது தொடர்பில் நாம் இன்னமும் யோசிக்கவும் இல்லை.

- இவ்வாறு இலங்கை தமிழரசு கட்சியின் பெருந்தலைவர் இரா.



சம்பந்தன் எம். பி. தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக தமிழர்

11

## முதியவர் திடீர் மரணம்; கொலை என்று சந்தேகம்!

வடமராட்சி, டிசெ. 26

வடமராட்சி கிழக்கு - குடத்தனையை சேர்ந்த முதியவர் ஒருவரின் மரணம் கொலையாக இருக்கலாம் என்று சந்தேகம் நிலவுகிறது. இதனால், அவரின் உடல்கூற்று பாகங்கள் இரசாயன பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குடத்தனை - பொற்பதியை சேர்ந்த சின்னத்தம்பி குருசாமி (வயது 73) என்பவர் நேற்று முன்தினம் ஞாயிற் றுக்கிழமை பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட

11

## வடக்கு, கிழக்கில் இன்று முதல் மழை காலநிலை அதிகரிக்கும்!

### வளிமண்டலவியல் திணைக்களம்

கொழும்பு, டிசெ. 26

இன்று புதன்கிழமை முதல் வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் மழையுடன் கூடிய காலநிலை அதிகரிக்கும் என்று வளிமண்டளவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, நேற்று முதல் வடக்கு, கிழக்கு, வடமத்திய மாகா ணங்களில் மழையுடன் கூடிய காலநிலை

11

## ஆழிப் பேரலை அனர்த்தத்தின் 19ஆவது நினைவுதினம் இன்று

யாழ்ப்பாணம், டிசெ. 26

ஆழிப் பேரலை அனர்த்தத்தின் 19ஆவது ஆண்டு நினைவுதினம் இன்றாகும்.

2004 டிசெம்பர் 26ஆம் திகதி நாட்டை தாக்கிய ஆழிப் பேரலையில் 35 ஆயிரத்து 322 பேர் உயிரிழந்தனர். 21 ஆயிரத்து 411 பேர் காயமடைந்தனர். ஆழிப் பேரலை நாட்டின் 14 மாவட்டங்களை தாக்கியது. இதில், வடக்கு, கிழக்கு மாகாணங்களே அதிக பாதிப்புகளை எதிர்கொண்டன.

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் கொல்லப்பட்டவர்களை நினைவுகூரும் விதமாக இன்றைய தினம் காலை 9.25 மணி முதல் 9.27 வரை நாடு முழுவதும் மௌன அஞ்சலி செலுத்தப்படவுள்ளது.

சுனாமியால் அதிகம் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங்களிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஆழிப் பேரலையில் கொல்லப்பட்டவர்களை



நினைவுகூரும் பிரதான நிகழ்வு வடமராட்சி கிழக்கின் உடுத்துறையில் நடைபெறவுள்ளது. உடுத்துறை சுனாமி நினைவாலயத்தில் பிரதான நினைவேந்தல் நடைபெறும். 9.25 மணிக்கு பொதுச் சுடர் ஏற்றலுடன் நினைவேந்தல் ஆரம்பமாகும்.

உடுத்துறை தவிர, ஆழிப்பேரலையால் அழிவை சந்தித்த வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, உடுத்துறை 10ஆம் வட்டாரம், தாளையடி, மணல்காடு பகுதிகளிலும் ஆழிப்பேரலை நினைவேந்தல்கள் நடைபெறவுள்ளன.

11

## 2,163 பேர் விபத்துகளில் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 26

இந்த ஆண்டில் 21 ஆயிரத்து 953 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளன. இதில், 2 ஆயிரத்து 163 பேர் உயிரிழந்தனர் என்று பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மனோஜ் ரணகல தெரிவித்துள்ளார்.

இந்த விபத்துகளில் 5 ஆயிரத்து 206 பேர் படுகாயமடைந்தனர். இவர்களில் பலர் நிரந்தரமாகவோ அல்லது குறுகிய காலமோ ஊனமுற்றுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினர்.

இலங்கை மருத்துவ சங்கத்தின் வீதி பாதுகாப்பு நிபுணர் குழுவின்

11



# உலக தமிழர் பேரவையினரின் படங்களுக்கு முட்டை வீச்சு!

வவுனியா, டிசெ. 26

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இமய மலை பிரகடனத்தின் ஏற்பாட்டாளர்களான உலகத் தமிழர் பேரவை உறுப்பினர்களின் படங்களுக்கு முட்டை வீசி தாக்கினர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வவுனியாவில் முன்னெடுத்து வரும் போராட்டம் நேற்று 2,500ஆவது நாளை எட்டியது. இதையொட்டி அவர்கள் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

இதன்போதே உலகத்தமிழர் பேரவையின் உறுப்பினர்களின் படங்களுக்கு முட்டை வீசி தாக்கி தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். (ஐ)

# 238 காணி பிணக்குகளுக்கு மத்தியஸ்தர் சபை மூலம் தீர்வு

வவுனியா, டிசெ. 26

வவுனியா மாவட்டத்தில் விசேட காணி மத்தியஸ்தர் சபை ஊடாக 238 காணிப் பிணக்குகளுக்கு தீர்வு காணப்பட்டன என்று நீதி அமைச்சின் மாவட்ட பயிற்சி உத்தியோகத்தர் இ. விமல்ராஜ் தெரிவித்துள்ளார்.

வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற வவுனியா விசேட காணி மத்தியஸ்தர் சபையின் 5ஆவது வருட பூர்த்தி நிகழ்வில் அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தனது உரையில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

வவுனியா மாவட்ட விசேட காணி மத்தியஸ்தர் சபை ஆரம்பித்து 5 வருடத்தை பூர்த்தி செய்கிறது. வடக்கு - கிழக்கு மாகாணங்களில் காணப்படும் காணிப் பிணக்குளுக்கு தீர்வு காண்பதற்காக காணி மத்தியஸ்தர் சபைகள் உருவாக்கப்பட்ட போதும், தற்போது 16 மாவட்டங்களில் இயங்கி வருகிறது. ஏனைய மாவட்டங்களில் உருவாக்க முயற்சிகள் நடைபெறுகின்றன.

காணிப் பிணக்குகள் சிக்கல் நிறைந்தவை. அவற்றை நேர்த்தியாகக் கையாள வேண்டும். அந்த வகையில் வவுனியா மாவட்ட காணி மத்தியஸ்தர் சபையில் கடந்த 5 வருடங்களில் ஆயிரத்து 184 காணிப் பிணக்குகள் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன. இவை நீதிமன்றம், பொலிஸ், நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் ஊடாக ஆற்றுப்படுத்தப்பட்டன.

பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியில் கோவிட் காலப்பகுதி மற்றும் பொருளாதார நெருக்கடி காலம் உள்ளடங்களாக எமது மாவட்ட காணி மத்தியஸ்தர் சபை உறுப்பினர்கள் செயல்பட்டு 238 காணிப் பிணக்குகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளன. 260 காணிப் பிணக்குகள் இரு பகுதியினரின் இணக்கப்பாட்டுடன் தீர்வு காண முடியாத நிலையில் அவற்றுக்கு தீர்க்கப்படாமைக்கான சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

59 பிணக்குள் முறைப்பாட்டாளர்களால் மீளப் பெறப்பட்டுள்ளன. ஏனைய பிணக்குகளையும் தீர்வு காணும் வகையில் காணி மத்தியஸ்தர் சபையில் அமர்வுகள் நடைபெற்று வருகின்றன. இந்த மத்தியஸ்தர் சபை ஊடாக மக்கள் சிரமங்களின்றி இரு பகுதி இணக்கபாட்டுடன் காணி பிணக்குகளுக்கு தீர்வு காண முடியும் - என்றார்.

# உழைப்பாளிகளான மலையக மக்களுக்கு உரிய மரியாதை இன்னும் கிடைக்கவில்லை!

## எதிர்க்கட்சி தலைவர் சஜித்

கொழும்பு, டிசெ. 26

அரசமைப்பின் பிரகாரம் சகல பிரஜைகளும் சமமாக நடத்தப்பட வேண்டும் என்ற போதிலும் கடுமையாக உழைக்கும் மலையக மக்களுக்கு உரிய மரியாதையும் பலமும் கிடைக்கவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஜஸ தெரிவித்துள்ளார்.

மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளது. இதையொட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை 200 இல் மலையகம் மாற்றத்தை நோக்கி என்ற நிகழ்வு நுவரெலியாவில் நடந்தது. இதில், உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும், மலையக தொழிலாளர் சமூகத்தை தேயிலை தொழில்முயற்சியாளர்களாக உருவாக்குவதே எமது நோக்கம். மலையக சமூகத்தை சொந்த நிலத்தை வைத்துள்ள தேயிலை தொழில் முயற்சியாளராக மாற்றும் புரட்சியானது ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தில் ஆரம்பிக்கப்படும்.

அத்துடன், துன்பகரமான வாழ்க்கையை வாழ்ந்து நாட்டுக்கு அந்நிய செலாவணியை தேடிதந்து பலம் சேர்க்கும் மலையக மக்களுக்கு தமது நன்றிகளையும் பாராட்டையும் தெரிவிப்பதாகவும் இதன் போது அவர் கூறினார். (ஐ)

# ஜோசப் பரராஜசிங்கத்தின் 18ஆம் ஆண்டு நினைவேந்தல்!



யாழ்ப்பாணம், டிசெ. 26

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் 18ஆம் ஆண்டு நினைவுதினம் நேற்று நினைவேந்தப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமை பணிமனையில் நேற்று முற்பகல் 10 மணிக்கு இந்த அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது அன்னாரின் உருவப்படத்துக்கு யாழ். மாவட்ட அமைப்பாளர் பொன் மாஸ்டர் மலர்மாலை அணிவித்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் அஞ்சலி செலுத்தி உரையாற்றினார்.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணித்தலைவி வாசுகி சுதாகரன், மகளிர் அணிச் செயலாளர் திருமதி கிருபா கிரிதரன், விளையாட்டு பொறுப்பாளர் கிருபாகரன் செயல்பாட்டாளர் ஈழத்தமிழ்மணி ஆகியோர் நினைவுச்சுடரை ஏற்றி வைத்தனர். தொடர்ந்து கட்சியின் ஏனைய உறுப்பினர்கள் அஞ்சலி செலுத்தினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் நத்தார் ஆராதனையில் பங்கேற்றவேளை கடந்த 2006 டிசெம்பர் 25ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பொதுக்கூட்டமும் பிரகடனமும்

ஹற்றன், டிசெ. 26

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுக்கூட்டமும் பிரகடனமும் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 1.45 மணிக்கு ஹற்றன் நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மலையகத் தமிழ்த் தேசிய இனம் 200 என்ற தொனிப்பொருளில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு அந்தக் கட்சியின் மலையக பிராந்திய செயலாளர் டேவிட் சுரேன் தலைமை தாங்குவார்.

நிகழ்வில் கலாநிதி சி. சிவசேகரம் மலையக மக்கள் - ஒரு எதிர்கால நோக்கு, சே. மோகன தர்ஷினி மலையக பெண்களின் சவால்களும் தீர்வுக்கான முன்மொழிவுகளும், சி. கா. செந்திவேல் உழைக்கும் மக்கள் அதிகாரமும் மலையக தமிழ் மக்களும், சிவனு ராஜேந்திரன் மலையகம் 200 பயணிக்க வேண்டிய பாதை சாத்தியங்களும் சவால்களும் சட்டத்தரணி இரா. ரஞ்சன் மலையகத் தமிழ்த் தேசிய இனம் எதிர்கொள்ளும் அரசியல் சவால்கள், செப. மோகன் மலையக தமிழர்களும் நில உரிமையும் என்ற தலைப்புகளில் உரையாற்றுவர்.

பிரகடன உரையை தொடர்ந்து கலைநிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (ஐ)

# வெள்ளம் பாதித்த மக்களுக்கு உலருணவு பொதி அன்பளிப்பு

மட்டக்களப்பு, டிசெ. 26

கிரானில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 175 குடும்பங்களுக்கு உலருணவு பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. பிரான்ஸ்வாழ் தமிழ் வர்த் தக சங்கத்தின் 10 இலட்சம் ரூபாய் நிதி அனுசரணையில் இந்த உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

கிரான் பிரதேச செயலாளர் ராஜ்பாபு தலைமையல் உலருணவுப் பொதிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)







பண்ணாகம் வடக்கு அ.மி.த.க. பாடசாலையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற பரிசளிப்பு விழாவின் பதிவுகள்...!

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
26.12.2023 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், மார்கழி 10

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அரசியல் தீர்வில் இந்தியா

ஈழத் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் இந்தியாவை அகற்றுவதற்கான சதி முயற்சியொன்று இடம்பெறுவதாகவும் - புதிய அரசமைப்பின் ஊடாக 13ஆவது திருத்தச் சட்டத்தை முற்றிலுமாக இல்லாமல் ஆக்குவதுதான் ரணில் விக்கிரமசிங்கவின் திட்டம் என்றும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி. வி. விக்னேஸ்வரன் தெரிவித்திருக்கின்றார். விக்னேஸ்வரன் கூறுவது போன்று 13ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாமல் ஆக்குவதற்கான முயற்சியில் ரணில் விக்கிரமசிங்க ஈடுபடுகின்றாரா? கோட்டாபய ராஜபக்ஷ அவ்வாறான முயற்சியில் ஈடுபட்டிருந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் குறிப்பிட்டளவான தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின்போது - புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. இதற்கு யார் காரணம்? இலங்கை தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரே இதற்கான காரணம். சம்பந்தன் சந்திப்பில் கலந்து கொள்ளும் போதெல்லாம் புதிய அரசியல் யாப்பு என்னும் சொல்லை உச்சரிக்கின்றார். சம்பந்தன் அவ்வாறு உச்சரிக்கின்றபோது, அதற்கு ரணில் பதிலளிக்க வேண்டியிருக்கின்றது. அடுத்த ஆண்டு இடம்பெறும் தேர்தல்களுக்கு பின்னர்தான் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் நாங்கள் பேச முடியுமென்று ரணில் பதிலளித்திருக்கின்றார். இப்போது, தவறு யாருடைய பக்கத்தில் இருக்கின்றது - ரணிலின் பக்கத்திலா அல்லது தமிழ் கட்சிகள் மத்தியிலா?

ரெலோவின் முன்னெடுப்பில் இந்திய பிரதமருக்கு கடிதம் அனுப்பும் முயற்சி வெற்றிபெற்றது. ஆனால், சம்பந்தனோ கையெழுத்திடுவதற்கு அடம்பிடித்தார். பின்னர் மீண்டுமொரு கடிதம் அனுப்பும் முயற்சி மேற்கொள்ளப்பட்டபோது, முன்னர் அனுப்பப்பட்ட கடிதத்தை பலவீனப்படுத்தும் நோக்கில் சம்பந்தன் தனியான கடிதமொன்றை அனுப்பினார். சம்பந்தனை அவ்வாறு தனியாகக் கடிதம் எழுதுமாறு ரணில் கூறவில்லை. 13ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழித்தால் முதலில் மகிழ்ச்சியடையப் போவது நான்தான் என்னும் வகையில் செயல்பட்டுவரும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனியான கடிதமொன்றை அனுப்பியிருந்தார்.

ரெலோவின் முயற்சியின் கனதியை பலவீனப்படுத்துவதுதான் கஜேந்திரகுமாரின் இலக்காக இருந்தது. ஏனெனில், அவர் 13 எதிர்ப்பு ஊர்வலமொன்றை யாழ்ப்பாணத்தில் முன்னெடுத்திருந்தார். ஆனால், அவரோ இப்போது பிறிதொரு விடயத்தை கூறுகின்றார் - அதாவது, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் தமிழர்களுக்கான ஏற்றுக்கொள்ளத்தக்க இறுதித் தீர்வு இன்னமும் வழங்கப்படவில்லை என்னும் உண்மையை, இந்திய ஆட்சியாளர்களிடம் கொண்டு செல்வதற்கான வழிவகைகளை புதிய இந்தியத் தூதுவர் மேற்கொள்ள வேண்டுமென்று கூறுகின்றார். அந்த முயற்சியை இந்திய தூதுவர் மேற்கொள்ள வேண்டுமா அல்லது தமிழ் மக்களின் அரசியல் தலைவர்கள் முன்னெடுக்க வேண்டுமா? தமிழ் மக்களின் தேவையை இந்திய ஆட்சியாளர்களிடம் கொண்டு செல்ல வேண்டியது யாருடைய கடமை?

யுத்தம் முடிவுற்றதைத் தொடர்ந்து சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடனடியாகவே இந்தியாவை நோக்கித்தான் சென்றிருக்க வேண்டும். இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஒன்றுதான் ஈழத் தமிழ் மக்களுக்கான ஒரேயொரு விமோசனமாகும் - இதனை நாங்கள் சரிவர பயன்படுத்தத் தவறிவிட்டோம். போர் முடிவுற்றிருக்கும் பின்னணியில் இந்தியா இந்த விடயத்தில் நேரடியாக தலையீடு செய்ய வேண்டும். இலங்கைத் தீவில் நல்லிணக்கம் ஏற்பட வேண்டும் என்றால் இந்தியாவின் தலையீடும் ஆலோசனையும் அவசியம் என்னும் நிலைப்பாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுத்திருக்க வேண்டும். ஆனால், அது நடைபெறவில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியாவை விரோதித்துக் கொண்டு, தனிநாட்டை வெற்றிகொள்ள முடியுமென்று எண்ணியது போன்றுதான் கூட்டமைப்பும் இந்தியாவின் தயவு இல்லாமல் இனப்பிரச்னைக்கான தீர்வைக் காண முடியுமென்று எண்ணியது. அந்த அடிப்படையில்தான் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து புதிய அரசியல் யாப்பு ஒன்றை கொண்டுவர முடியுமென்று எண்ணியது. அந்த முயற்சி மோசமான தோல்வியை சந்தித்தது. ஆனால், இப் போதும் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் தமிழ் தரப்புகள் பேச முற்படுகின்றன. புதிய அரசியல் யாப்பு தேவையென்று தமிழ் கட்சிகள் கேட்டால் அதன் பின்னர் 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்த வேண்டிய கடப்பாடு இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு இல்லை.

ரணில் விக்கிரமசிங்க மட்டுமல்ல, தென்னிலங்கை அரசியல்வாதிகள் அனைவருமே இந்தியாவின் தலையீட்டை விரும்பவில்லை. இது எங்களின் பிரச்னை நாங்களே பார்த்துக் கொள்வோம் என்றவாறே பதிலளிக்க முற்படுகின்றனர். ஆனால், இது ஓர் உள்நாட்டு விவகாரம் அல்ல - இது ஒரு பிராந்திய விவகாரம் இந்தியாவின் உடனடி அயல்நாடு ஒன்றுக்குள் நிலவும் பிரச்னை, இதனை தீர்ப்பதற்காகவே இந்தியாவின் தலையீடு நிகழ்ந்தது. ஆனால், அது இன்னும் முற்றுப்பெறவில்லை. எனவே, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விளைவான 13ஆவது திருத்தச்சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு, இந்தியா தலையீடு செய்ய வேண்டும், இலங்கைத் தீவில் ஈழத் தமிழ் மக்கள் கௌரவத்துடன் வாழ்வதற்கான அழுத்தங்களை இந்தியா பிரயோகிக்க வேண்டும் என்று கூற வேண்டிய - அதற்காக இந்தியாவை நோக்கி பணியாற்ற வேண்டியது யார்? அது யாருடைய பணி? புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசினால் இந்தியாவின் அழுத்தத்துக்கான தேவை இல்லாமல் போய்விடும் - உண்மையில் தமிழ் மக்களின் அரசியல் தீர்வில் இந்தியாவை தவிர்ப்பதற்கான வாய்ப்பை தமிழ்த் தேசிய தலைமைகளே வழங்குகின்றன.

# அகத்தியர் குரு பூசை நிகழ்வும் கலாமன்ற வெள்ளி விழாவும்!

*யாழ்ப்பாணம், டிசெ. 26*

நல்லூர் சிறீஸ்கந்தபதி கலாமன்றம் நடத்தும் அகத்தியர் பெருமான் குரு பூசையும் கலாமன்ற வெள்ளி விழாவும் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிறீ ஸ்கந்தபதி கலாமன்ற பணிப்பாளர் கலாவித்தகர் திருமதி மா. அனந்தலெட்சுமி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் அருளுரையை நல்லை ஆதீன இரண்டாவது குருமகா சந்நிதானம் வண. சிறீலசிறீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாகளும் ஆசியுரையை இணுவில் தர்மசாஸ்தா குருகுல காயத்திரிபீட ஆசிரியர் சிவசிறீ மகாதேவ சோமசுந்தர குருக்களும் வழங்குவர்.

இந்த நிகழவில் பிரதம அதிதியாக யாழ்ப்பாண பல்கலைகழக இந்து நாகரிகத்துறை பேராசிரியர் திருமதி விக்னேஸ்வரி பவநேசன், சிறப்பு அதிதியாக கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன், கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாண பல்கலைக்கழக இசைத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி திருமதி சுகன்யா அரவிந்தன், இந்துமகளிர் கல்லூரி சங்கீத ஆசிரியர் திருமதி கனகாம்பரி சிவனேஸ்வரநாதன் ஆகியோர் கலந்து கொள்வர்.

அகத்தியர் பெருமானின் குருபூசையை தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகும். இதில், சிறீஸ்கந்தபதி கலாமன்ற மாணவர்களின் இசைநிகழ்வும் நுண்கலைமாணி திருமதி கவிதா வாமதேவ சர்மாவின் நெறியாள்கையில் வீணை இசையும் உரும்பிராய் ஜெயானந்தா ஜீவநர்த்தனாலய இயக்குநர் முதுகலைமாணி செல்வி ஆ. ஜீவிதா குழுவினர் வழங்கும் நடனநிகழ்வும் சைவப்புலவர் கந்த. சத்தியதாசனின் "பொதிகை மலையில் ஞானம் பெற்ற அகத்தியர் " என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவும் நடைபெறவுள்ளன.

தொடர்ந்து, வாத்திய பிருந்தா இசை நிகழ்ச்சி நடைபெறும் இதில் கலாவித்தகர் திருமதி மா. அனந்தலெட்சுமி - வீணை, முதுகலைமாணிகள் திருமதி சுபேந்தினி லிங்கேஸ்வரன், திருமதி மதிவதனி விஜிந்தன் வயலின் குழுவினர் வயலின் இசைப்பர். பரிசளிப்பு நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (ஐ)

# சட்டவிரோதமாக மதுபான விற்பனையில் ஈடுபட்ட மூவர் யாழ்ப்பாணத்தில் கைது!

*யாழ்ப்பாணம், டிசெ. 26*

சட்டவிரோதமாக மதுபான விற்பனையில் ஈடுபட்ட மூவரை பொலிஸார் நேற்று கைது செய்தனர்.

யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினரும் யாழ்ப்பாண பொலிஸ் போதைதடுப்பு பிரிவினரும் இணைந்து வெவ்வேறு இடங்களில் நடத்திய சுற்றிவளைப்பிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதானோரிடமிருந்து 117 கால் போத்தல்கள் சாராயம், 9 முழுப் போத்தல்கள் சாராயமும் கைப்பற்றப்பட்டன.

கைதானவர்கள் யாழ். மாவட்ட தலைமை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# கால்நடைகள் களவு அதிகரிப்பு அவதானத்துடன் செயல்படுங்கள்!

## கிளிநொச்சி பொலிஸார் அறிவுறுத்து

*கிளிநொச்சி, டிசெ. 26*


கிளிநொச்சி மாவட்டத்தில் கால்நடைகள் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகிறது. இது தொடர்பில் கால்நடை உரிமையாளர்கள் மிகுந்த அவதானத்துடன் செயல்பட வேண்டும் என பொலிஸார் அறிவுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், உருத்திரபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு வீட்டில் கட்டிவைக்கப்பட்டிருந்த கன்று ஈனும் நிலையிலுள்ள பசுவை கொன்று இறைச்சியாக்கப் பட்டுள்ளது.

கன்று ஈனுவதற்கு சில மாதங்களே உள்ள நிலையில் ஒன்றரை லட்சம் ரூபாய் பெறுமதியான கால்நடையை அதன் வயிற்றில் இருந்த கன்றை வெளியில் எடுத்து வீசிவிட்டு இறைச்சியாக்கி கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**டிசெம்பர் - 26 செவ்வாய்க்கிழமை**
சோபகிருது வருடம் - மார்கழி 10
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : பௌர்ணமி




**மேடம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். விருந்தினர் வருகையால் வீடு களைகட்டும்.

**இடபம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். தோற்றப்பொலிவு கூடும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். நீண்ட நாள் பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்கும்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் குடும்பத்தாரை குறை கூறி கொண்டிருக்க வேண்டாம். ஒத்துழைப்பின்மையால் லாபம் குறையும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் உங்களுக்கு களங்கம் ஏற்படலாம்.

**கடகம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். எவ்வளவு பணம் வந்தாலும் பற்றாக்குறை நீடிக்கும். வியாபாரத்தில் ஓரளவு லாபம் வரும். சக பணியாளரிடம் விட்டுக்கொடுத்து நடவுங்கள்

**சிம்மம்**
தன்னம்பிக்கையுடன் பொதுகாரியங்களில் ஈடுபடுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். எதிர்பாராத சந்திப்பு நிகழும். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**கன்னி**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். உறவினர்கள் நண்பர்கள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள்.

**துலாம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த சோர்வு நீங்கி உற்சாகமடைவீர்கள். குடும்பத்தில் அமைதி திரும்பும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். யாருக்கும் பணம் நகை வாங்கித் தருவதில் ஈடுபட வேண்டாம்.

**தனுசு**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். சகோதரர்களின் அரவணைப்பில் இருக்கும். தாயாரின் உடல் நிலைசீராகும். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும்.

**மகரம்**
ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். பழைய சிக்கல்கள் தீரும்.

**கும்பம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள். ஆடம்பர செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள்.

**மீனம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். சகோதரி உதவுவார். நண்பர்களால் ஆதாயம் பெருகும். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள்.

# சென்னை, கோவையில் கொரோனா பரிசோதனையை அதிகரிக்க முடிவு

சென்னை, டிசெ. 26

புதிய வகை கொரோனா வைரஸ் தொற்று வேகமாக பரவும் தன்மை கொண்டதால் சென்னை, கோவை உள்ளிட்ட மாவட்டங்களில் பரிசோதனைகள் அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மூன்று அலைகளாக பரவி பல லட்சம் பேருக்குபாதிப்பை ஏற்படுத்திய கொரோனா தொற்று, கடந்த ஓராண்டாக கட்டுக்குள் இருந்தது. இரண்டரை ஆண்டுகளாக இயல்பு வாழ்க்கையை இழந்த மக்கள், கடந்த ஓராண்டாகத்தான் கொரோனாவின் அச்சத்திலிருந்து மீண்டெழுந்துள்ளனர். இத்தகைய சூழலில் மீண்டும் கொரோனா தொற்று பரவல் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

கடந்த சில நாட்களாக இந்தியாவிலும் ஜெ. என்.1 வகை கொரோனா தொற்று தீவிரமாக பரவி வருகிறது. ஒமைக்ரானின் உட்பிரிவான பிஏ 2.86 பைரோலா வைரஸிலிருந்து உருமாற்றமடைந்ததாகக் கூறப்படும் இந்த வகை வைரஸ் மிக விரைவாக ஒருவரிடமிருந்து மற்றொருக்கு பரவும் என்றும் இணை நோயாளிகள், முதியோர், குழந்தைகள், கர்ப்பிணிகள், எதிர்ப்பாற்றலை குறைக்கும் சிகிச்சை பெறுபவர்களுக்கு பாதிப்புகளை அதிகரிக்கும் எனவும் மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

# தமிழகத்தில் தி. மு. க. ஆட்சி தொடர்ந்தால் இலங்கைக்கு ஏற்பட்ட நிலையே இங்கும்!

## சசிகலா சொல்கிறார்



சென்னை, டிசெ. 26

தமிழ்நாட்டில் தி. மு. க. ஆட்சி தொடர்ந்தால் இலங்கைக்கு ஏற்பட்ட நிலைதான் வரும். அதை மக்களும் உணர்ந்துள்ளனர் என வி. கே. சசிகலா நம்பிக்கை தெரிவித்துள்ளார். அத்துடன், அ. தி. மு. கவின் அனைத்து அணிகளையும் இணைக்க முடியும்.

சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் கூறியவை வருமாறு,

அரசு எதற்கெடுத்தாலும் பணம்இல்லை என சொல்கிறது. ஆனால், தமிழக அரசு, சி. எம். டி. ஏ., சென்னை மாநகராட்சி, தனியார் பங்களிப்பு என மொத்தம் ரூ.2 40 கோடி செலவில் கார் பந்தயம் நடத்த போர்க் கால அடிப்படையில் பணிகளை மேற்கொண்டனர். இதற்கான தொகை எங்கிருந்து வருகிறது. இதனால் மக்களுக்கு என்ன பயன். ஆனால், பேரிடரின்போது மக்களை மீட்க போர்க்கால அடிப்படையில் பணிகளை செய்யவில்லை. விளம்பரத்தை மட்டுமே திமுக அரசு நம்பியிருக்கிறது. கல்வி கடனை இரத்து செய்யவில்லை.

இங்கு தி. மு. க. ஆட்சி தொடர்ந்தால் இலங்கைக்கு ஏற்பட்ட நிலைதான் வரும். அதை மக்களும் உணர்ந்துள்ளனர். தற்போது தி. மு. க. அரசு தெளிவில்லாமல் செயல்பட்டு வருகிறது. அவர்கள் தங்களை திருத்தி கொண்டு வாக்களித்த மக்களை வஞ்சிக்காமல் இருக்க வேண்டும்.

அதிமுகவின் அனைத்து அணிகளையும் சேர்க்க முடியும். எம். ஜி. ஆர்., ஜெயலலிதாவின் கருத்துகளை நிறைவேற்றும் பொறுப்பு பிரிந்த அனைத்து அணியினருக்கும் இருக்கிறது. விரைவில் நல்ல முடிவு வரும் - என்றார். (ஐ)

# ஊழல் குறித்து பேசுவதற்கு பா. ஜ. க. அருகதையற்றது!

## தொல். திருமாவளவன்



திருச்சி, டிசெ. 26

பா.ஜ.கவைச் சேர்ந்தவர்கள் ஊழல் குறித்து பேசுவதற்கு அருகதையற்றவர்கள். சி. ஏ. ஜி. அறிக்கையில் மெகா ஊழல் குறித்து வெளியாகி உள்ளது. இதுகுறித்து இந்திய ஊடகங்கள் பேசவில்லை - என்று விடுதலை சிறுத்தைகளின் தலைவரும் எம். பியுமான தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

தந்தை பெரியாரின் 50ஆவது ஆண்டு நினைவு தினம் திருச்சியில் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு பேசிய அவர்,

வரும் பாராளுமன்றத் தேர்தலில் சனாதன சக்திகளை விரட்டியடிப்போம் என பெரியாரின் நினைவு நாளில் உறுதி ஏற்கிறோம். பா. ஜ. க. ஆட்சி பொறுப்பேற்றதிலிருந்து எதேச்சதிகாரமான போக்கில் செயல்பட்டு வருகின்றது. எதிர்க்கட்சிகளை ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை. அரசமைப்பு சட்டத்தையும் அவர்கள் மதிப்பதில்லை. அவர்கள் விரும்பியதை போல சட்ட மசோதாக்களை நிறைவேற்றி வருகின்றன. இது, ஜனநாயகத்துக்கு விரோதமானது.

ஊழல் குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் பொன்முடிக்கு தண்டனை கொடுக்கப்பட்டது தொடர்பாக சட்டரீதியாக அணுக தி. மு. க. தயாராகி வருகிறது. பொன்முடியும் மேல்முறையீடு செய்ய உள்ளார். பா.ஜ.கவைச் சேர்ந்தவர்கள் ஊழல் குறித்து பேசுவதற்கு அருகதையற்றவர்கள். சி. ஏ. ஜி. அறிக்கையில் மெகா ஊழல் குறித்து வெளியாகி உள்ளது. இதுகுறித்து இந்திய ஊடகங்கள் பேசவில்லை. இதுவரை எந்த ஆட்சியிலும் நடைபெறாத அளவுக்கு மிக மோசமான ஊழல் நடைபெற்றுள்ளது. இதுவரை இல்லாத அளவிற்கான ஊழல் ஆட்சியாக இந்த ஆட்சி உள்ளது - என்றார்.

# இராமேஸ்வரம் மீனவர்கள் விரட்டியடிக்கப்பட்டனர்!

இராமேஸ்வரம், டிசெ. 26

இராமேஸ்வரத்தில் இருந்து 8 நாட்களுக்கு பிறகு 100இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் நேற்று முன்தினம் மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர்.

கச்சத்தீவு அருகே மீன் பிடித்தபோது, 2 படகில் வந்த இலங்கை கடற்படையினர் இராமேஸ்வரம் மீனவர்களை விரட்டியடைத்தனர்.

கடற்படையினர், 20இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளின் வலைகளை இலங்கை வெட்டி சேதப்படுத்தினர் என்று மீனவர்கள் தரப்பில் கூறப்படுகிறது.

இதனால், படகு ஒன்றுக்கு 50 ஆயிரம் முதல் 60 ஆயிரம் (இந்திய) ரூபாய் இழப்பு ஏற்பட்டதாகவும் தெரிவித்தனர். (ஐ)





(படங்கள் : வி.ஜெகன்)

# யாழ். மரியன்னை பேராலயத்தில் இயேசு பாலன் பிறப்பு திருப்பலி!

யாழ்ப்பாணம், டிசெ. 26

உலகெங்கும் வாழும் கிறிஸ்தவர்கள் நேற்று கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடினர். இதையொட்டி நேற்று நாடு முழுவதும் உள்ள தேவாலயங்களில் சிறப்பு பூசை வழிபாடுகள் நடைபெற்றன.

யாழ்ப்பாணத்தில் புனித மரியன்னை தேவாலயத்தில் நத்தார் விசேட திருப்பலி நள்ளிரவு 12 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது.

யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் ஜஸ்டின் பேர்னாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் நத்தார் விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இத்திருப்பலியில் யாழ்ப்பாண மறை மாவட்ட அருட்தந்தையர்கள், வட மாகாண ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸ், மற்றும் பெருமளவிலான மக்கள் கலந்துகொண்டனர். (ஐ)




# வெற்றிலைக்கேணியில் 35 கிலோ கஞ்சா சிக்கியது

## 1.4 கோடி பெறுமதியானது

வடமராட்சி, டிசெ. 26

வடமராட்சி வெற்றிலைக் கேணி பகுதியில் ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாய் பெறுமதியான கேரள கஞ்சா மீட்கப்பட்டது.

வெற்றிலைக்கேணி கடற் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் கரை ஒதுங்கிய சாக்கு மூடை ஒன்றை கடற்படையினர் மீட்டனர்.

அதனை சோதனையிட்ட போது, 16 பொதிகளில் அடைக்கப்பட்டிருந்த சுமார் 35 கிலோ 100 கிராம் கேரள கஞ்சாவை மீட்டனர். இதன் சந்தை மதிப்பு சுமார் ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாய் என்று தெரிவிக்கப்பட்டது.

கஞ்சா பொதியை சட்ட நடவடிக்கைக்காக மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ - 02)

# யாழ்ப்பாணம் மாநகர சபை அடாவடியாக செயல்படுகிறது

## யாழ். வணிகர் கழகம் சாடல்

யாழ்ப்பாணம், டிசெ. 26

யாழ்ப்பாணம் மாநகர சபை அடாவடியாக செயல்படுகின்றது என்று யாழ்ப்பாண வணிகர் கழகம் குற்றச்சாட்டியுள்ளது.

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் நாளை புதன்கிழமை மார்கழி இசை நிகழ்வும் வடக்கு மாகாணத்தின் சிறிய, நடுத்தர உற்பத்தியாளர்களின் கண்காட்சியும் விற்பனையும் நடைபெறுகின்றது.

யாழ்ப்பாணம் கலாசார நிலையத்தில் நடைபெறவுள்ள கண்காட்சி, விற்பனை காட்சியறை ஒன்றுக்கு நாளொன்றுக்கு ஆயிரம் ரூபாய் வரியாக செலுத்தவேண்டும் என்று யாழ்ப்பாணம் மாநகர சபை அறிவித்தல் கடிதம் அனுப்பியுள்ளது.

இதற்கு எதிர்ப்பு வெளியிடுவதுடன், இந்த விடயம் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநருக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளதாக யாழ். வணிகர் கழகத்தின் தலைவர் இ. ஜெயசேகரம் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்தில் உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை காட்சிப்படுத்தும் கண்காட்சி இலவசமாக முன்னெடுக்கப்படுகின்ற நிலையில் யாழ்ப்பாண மாநகர சபை அடாவடியாக செயல்படுகிறது என்றும் அவர் கூறினார். (ஐ)

# பத்திரிகையாளர் தில்லைநாதனுக்கு வடமராட்சியில் கௌரவமளிப்பு

வடமராட்சி, டிசெ. 26

மூத்த பத்திரிகையாளர் சின்னத்துரை தில்லைநாதனுக்கு ஊடக சிகரம் எனும் சிறப்பு கௌரவம் வழங்கியது வடமராட்சி ஊடக இல்லம்.

இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்துடன் இணைந்து இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தால் அண்மையில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான சிறப்பு விருது வழங்கும் விழாவில் வடமராட்சி மண்ணின் மைந்தனும் மூத்த பத்திரிகையாளருமான சின்னத்துரை தில்லைநாதனுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், வடமராட்சி ஊடக இல்லத்தின் பருத்தித்துறையில் உள்ள பணிமனையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்வில் யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தினரால் “ஊடக சிகரம்“ எனும் சிறப்பு கௌரவம் வழங்கப்பட்டது.



வடமராட்சி புலோலியைச் சேர்ந்த சின்னத்துரை தில்லைநாதன் அரைநூற்றாண்டுக்கும் அதிகமான காலமாக ஆற்றி வரும் பத்திரிகைப் பணிக்காகவே அவருக்கு இந்தப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (ஐ)

# கசிப்புடன் பெண் சுன்னாகத்தில் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 26

19.5 லீற்றர் கசிப்புடன் 34 வயது பெண் ஒருவரை சுன்னாகம் பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஏழாலை தெற்கு, மயிலங்காட்டை சேர்ந்த பெண் ஒருவரே நேற்று முன்தினம் இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே அவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட பெண்ணை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# கைபேசிகளை களவுகொடுத்தோருக்கு நெல்லியடி பொலிஸாரின் அறிவிப்பு!

வடமராட்சி, டிசெ. 26

போதைப்பொருளுடன் கைதான பெண்ணிடம் இருந்து மீட்கப்பட்ட கைபேசிகளை அடையாளம் காட்டுமாறு நெல்லியடி பொலிஸார் அறிவித்துள்ளனர்.

துன்னாலையை சேர்ந்த பெண்ணொருவர் போதைப் பொருட்களுடன் கைதான போது, அவரிடம் இருந்து 19 கைபேசிகளை பொலிஸார் மீட்டிருந்தனர்.

இந்த கைபேசிகள் களவாடப்பட்டவையாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர். இந்த நிலையில், அண்மைய நாட்களில் கைபேசிகளை களவு கொடுத்தோர், நெல்லியடி பொலிஸ் நிலையத்துக்கு வருகை தந்து அவற்றைப் பார்வையிட்டு - அடையாளம் காட்டுமாறும் நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

# யாழ். சிறையிலிருந்து 16 கைதிகள் விடுதலை!

யாழ்ப்பாணம், டிசெ. 26

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து 16 கைதிகள் நேற்று திங்கட்கிழமை விடுதலை செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகர் கே. பி. ஏ. உதய குமார தலைமையிலான சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் கைதிகளை சிறைச்சாலையில் இருந்து திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சம்பிரதாயபூர்வமாக வழியனுப்பி வைத்தனர்.

ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் சிறு சிறு குற்றங்களுக்காக தண்டனை பெற்றவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இதேவேளை நாடளாவிய ரீதியில் 1,004 பேர் விடுதலை செய்யப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)






நல்லூர் சிவன் ஆலயத்தின் பெருந்திருவிழாவில் சிவபெருமான் பிட்டுக்கு மண் சுமந்த கதை திருவிழாவின்போது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள் : ஐ. சிவசாந்தன்)

## வற்றாப்பளை அம்மன் கோவிலில்

# திருட முயன்றவர்கள் பாம்பு தீண்டியதால் தப்பியோட்டம்!

முல்லைத்தீவு, டிசெ. 26

**வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தில் திருட வந்தவர்களை பாம்பு தீண்டியதால் அவர்கள் திருட்டு முயற்சியை கைவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.**

கடந்த வெள்ளிக்கிழமை இரவு இந்த சம்பவம் நடந்தது.

திருடர்கள் 3 பேர் கதவை உடைத்துக் கொண்டு ஆலயத்துக்குள் நுழைந்துள்ளனர். அவர்கள் கூரியஆயுதங்களையும் எடுத்து வந்திருந்தனர். ஆலயத்திலிருந்த பாதுகாப்பு கமெரா இணைப்புகளை துண்டிக்கும் நோக்கத்தில் இணைப்பு பெட்டியினுள் ஒரு திருடன் கைவைத்துள்ளான். அதற்குள்ளிருந்த பாம்பு அவரை தீண்டியது.

இதையடுத்து, பாம்பு தீண்டிய திருடனை தூக்கிக் கொண்டு மற்றைய இரண்டு திருடர்களும் அங்கிருந்து சென்றனர். இந்த சம்பவங்கள் அனைத்தும் அங்கிருந்த பாதுகாப்பு கமெராவில் பதிவாகியுள்ளது.

இதனடிப்படையில், ஆலய நிர்வாகத்தால் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள வற்றாப்பளை அம்மன் ஆலயம், அதிசயங்கள் நிகழும் ஆலயம் என்று பக்தர்கள் மத்தியில் நம்பிக்கையுள்ளது. அங்கு வருடாந்தம் உப்புநீரில் விளக்கேற்றும் சடங்கு நிகழும் வருடாந்தம் பங்குனி விசாகப் பொங்கலுக்கு நாடு முழுவதிலுமிருந்து இலட்சக்கணக்கான பக்தர்கள் ஆலயத்தில் குழுமுவதுண்டு. இந்த திருட்டு விவகாரத்திலும், அம்மன் அதிசயம் காண்பித்துள்ளதாக பக்தர்கள் சிலாகித்து கூறினர். (ஐ)

## வவுனியா சிறையிலிருந்து 23 கைதிகள் விடுதலை!

வவுனியா, டிசெ. 26

நத்தார் தினமான நேற்று வவுனியா சிறைச்சாலையில் இருந்து 23 கைதிகள் பொதுமன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டனர்.

நத்தார் பண்டிகையை ஒட்டி நாடளாவிய ரீதியாக 1004 சிறைகைதிகள் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டனர்.

இதன்படி, வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் இருந்து சிறுகுற்றங்களை புரிந்த மற்றும் தண்டப்பணத்தை செலுத்த முடியாத 23 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

அவர்கள் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் அதிகாரிகள் முன்னிலையில் நேற்று விடுவிக்கப்பட்டனர். (ஐ)

## யாழ்ப்பாணத்தின் 3 இளைஞர்கள் புனர்வாழ்வுக்கு

யாழ்ப்பாணம், டிசெ. 26

யாழ்ப்பாணத்தில் போதைப்பொருட்களுடன் கைதானவர்களில் மூன்று இளைஞர்கள் கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

போதைப்பொருட்களுடன், இளவாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மாதகல், இளவாலை, காட்டுப்புலம் பகுதிகளைச் சேர்ந்த மூன்று இளைஞர்களே இவ்வாறு கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தின் பணிப்பின்பேரிலேயே இவர்கள் புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பப்பட்டனர் என்பது குறிப்பிடத்தகது. (ஐ)

## 4 வலம்புரி சங்குகளுடன் மன்னாரில் ஒருவர் கைது!

மன்னார், டிசெ. 26

நான்கு வலம்புரி சங்குகளை விற்பனை செய்யும் நோக்கில் வைத்திருந்த ஒருவரை சந்தேகத்தின் பேரில் மன்னார் பொலிஸ் விசேட குழுவினர் கைது செய்துள்ளனர்.

மன்னார் - சாந்திபுரத்தை சேர்ந்த 60 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் வலம்புரிச சங்கு வைத்துள்ளதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய ஞாயிற்றுக்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே கைது செய்யப்பட்டார். (ஐ)



## கிறிஸ்து பிறப்பு பெருவிழா மன்னாரில் சிறப்புற நடந்தது

மன்னார், டிசெ. 26

கிறிஸ்து பிறப்பு பெருவிழாவை மன்னார் மறை மாவட்ட கத்தோலிக்க மக்களும் நேற்று மிகவும் சிறப்பாக கொண்டாடினர். அதிகமான பங்குகளில் கிறிஸ்து வின் பிறப்பு விழாவை முன்னிட்டு நள்ளிரவு 12 மணிக்கு திருப்பலிகள் ஆரம்பமாகின.

கடந்த சில தினங்களாக மன்னாரில் மழை பெய்து வந்தபோதும் நேற்றைய தினம் காலநிலை சீராக காணப்பட்டதால் இரவுத் திருப்பலியில் பெருந்தொகையான பக்தர்கள் கலந்துகொண்டமையை அவதானிக்க முடிந்தது.

மன்னார் மறைமாவட்டத்தின் மூத்த பங்காகவும் கத்தோலிக்கர் செறிந்து வாழும் பகுதிகளில் ஒன்றாகவும் பேசாலை புனித வெற்றி அன்னை ஆலயத்தில் இரவு பெருவிழா திருப்பலியானது பங்குத்தந்தை அருட்பணி எஸ். அன்ரன் தலைமையில் உதவிப் பங்குத் தந்தை அருட்பணி அல்பன் ராஜ் அடிகளார் இணைந்து கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுத்தனர்.

திருப்பலி நிறைவுற்றதும் பங்கு மக்கள் முன்னிலையில் பங்குத்தந்தையால் கிறிஸ்து பிறப்பை முன்னிட்டு கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. அத்துடன், நத்தார் கீத இசை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (ஐ)

## பூந்தோட்டம் பொது சந்தையில் கழிவுகளை வீசுவோரால் சிரமம்!

வவுனியா, டிசெ. 26

வவுனியா நகர சபையின் நிர்வாகத்தின் கீழ் உள்ள பூந்தோட்டம் பொதுச்சந்தை கடந்த சில மாதங்களாக இயங்குநிலையின்றி உள்ளது. இந்நிலையில் அண்மைய நாட்களாக பொதுச்சந்தை வளாகத்தில் கோழி இறைச்சியின் கழிவுகளை சிலர் வீசிச்செல்கின்றனர். இதனால் அந்த பகுதியில் சுகாதாரசீர்கேடான நிலைமை உருவாகியுள்ளது.

வீசப்படும் கழிவுகளை நாய்கள் மற்றும் பறவைகள் இழுத்து செல்கின்றன. இதனால், கழிவுகள் அப்பகுதியெங்கும் சிதறுண்டு காணப்படுகின்றன. அத்துடன், அப்பகுதியில் துர்நாற்றமும் வீசுகின்றது.

இதனால், சந்தைக்கு அருகே வசிப்ப வர்கள் மற்றும் சந்தை வீதியை பயன்படுத்துவோர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

எனவே, இந்த விடயம் தொடர்பாக வவுனியா நகரசபை கவனம் செலுத்தி கழிவுகளை வீசுவோர் மீது சட்டநடவ டிக்கை எடுக்க வேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அத்துடன், சந்தையை புனரமைக்குமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)



# சிவனொளிபாத மலைக்கான யாத்திரை இன்று ஆரம்பம்!

## விதிமுறைகள் அடங்கிய வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, டிசெ. 26

**சிவனொளிபாத மலை யாத்திரை காலத்தின் போது பின்பற்றப்படவேண்டிய விதிமுறைகளை உள்ளடக்கி, இரத்தினபுரி மாவட்ட செயலாளரால் அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.**



இன்று புதன்கிழமை பூரணை தினத்தில் ஆரம்பமாகவுள்ள சிவனொளிபாத மலை யாத்திரை, அடுத்த ஆண்டு மே 24 ஆம் திகதி நிறைவுபெறவுள்ளது.

இந்த நிலையில், குறித்த வர்த்தமானி அறிவித்தலுக்கமைய பெயர் குறிப்பிடப்பட்டுள்ள இடங்கள் மாத்திரமே தங்குமிடங்களாக பயன்படுத்தப்பட முடியும். தற்காலிக தங்குமிடங்களை அமைக்கவோ அல்லது நடத்திச் செல்லவோ முடியாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தங்குமிடங்களில் யாசகம் பெறுவது அல்லது வழங்குவது தடை செய்யப்பட்டுள்ளது. அத்துடன், பெயர் குறிப்பிடப்பட்ட பாதுகாப்பான இடங்களைத் தவிர ஏனைய இடங்களில் நீராடுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

யாத்திரைக்கான மார்க்கத்தில் அல்லது தங்குமிடங்களில் பொலித்தீன் பொருட்களை பாதுகாப்பற்ற முறையில் வெளியேற்றக்கூடாது எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாத்திரீகர்கள் சிவனொளி பாத ஸ்தலத்தினுள் தங்குவதைத் தவிர்த்து, யாத்திரை நிறைவடைந்த உடன் வெளியேறவேண்டும் எனவும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நுவரெலியாவுக்கு சுற்றுலா வருவோர் தொகை உயர்வு!

நுவரெலியா, டிசெ. 26

வார இறுதியில் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஏனைய விடுமுறை நாட்களில் வெளி மாவட்டங்களிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் பெருந்தொகையான சுற்றுலா பயணிகள் நுவரெலியாவுக்கு வருகை தந்துள்ளனர்.



அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு தற்போது விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், நத்தார், புத்தாண்டு விடுமுறை காரணமாக பெரும் எண்ணிக்கையிலானவர்கள் நுவரெலியாவுக்கு வருகை தந்துள்ளனர்.

சுற்றுலா பயணிகளின் வருகையால் நுவரெலியா, விக்ரோறியா பூங்காவிலும் கிரகறி பூங்கா, கிரகறி வாவி கரையிலும், உலக முடிவு, சீதாஎலிய கோவில், வரலாற்று சிறப்புமிக்க தபால் நிலையம் போன்ற பகுதிகளிலும் சுற்றுலா பயணிகள் பெருமளவில் வந்து தமது பொழுதை களித்தனர்.

இவ்வாறு சுற்றுலா பயணிகள் விடுமுறை நாட்களில் நுவரெலியாவிற்கு வருகை தருவதால் வாகன தரிப்பிடங்களிலும் பிராதான வீதிகளிலும் போக்குவரத்து நெரிசல் காணப்பட்டது.

இந்த நாட்களில் நுவரெலியாவுக்கு சுற்றுலா பயணிகள் வருகை தருவதற்கு காலநிலை பொருத்தமானதாக உள்ளமையால் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியுடன் சுற்றுலா இடங்களை பார்த்து பொழுது போக்கி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# சட்டவிரோத மின்வேலியில் சிக்கி இளைஞர் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 26

சட்டவிரோதமாக பொருத்தப்பட்ட மின்வேலியில் சிக்கி ஒருவர் நேற்று திங்கட்கிழமை ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் பதுளை - அம்பகஸ்தோவ, தங்கமுவ பகுதியை சேர்ந்த 29 வயது நபராவார்.

தோட்டத்துக்கு வரும் வன விலங்குகளை தடுக்கும் நோக்கில் தோட்டத்தின் உரிமையாளர் மின்சார வேலியை அமைத்துள்ளார் என்று விசாரணையில் தெரிய வந்தது. தோட்டத்தின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை பண்டாரவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

# காணாமல் போன மாணவிகள் மாத்தறையில் வைத்து கைது!

கொழும்பு, டிசெ. 26

சுமார் மூன்று மாதங்களாக காணாமல் போயிருந்த மாணவிகள் இருவரையும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

குருநாகல் - கலகெதர, மாவத்தகம பகுதிகளை சேர்ந்த மாணவிகளே நேற்றைய தினம் மாத்தறை உயன்வத்தையில் கண்டுபிடிக்கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஒக்ரோபர் முதலாம் திகதி 18 மற்றும் 19 வயதுடைய குறித்த இரண்டு மாணவிகளும் மேலதிக வகுப்புக்கு செல்வதாகக் கூறி வீடுகளிலிருந்து வெளியேறியிருந்தனர். இவ்வாறு சென்றவர்கள் அன்றைய தினம் வீடு திரும்பவில்லை. இதையடுத்து அவர்களின் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்தனர்.

இதற்கமைய பொலிஸார் முன்னெடுத்த விசாரணையில் மாத்தறை, உயன்வத்தை பகுதியில் விடுதி ஒன்றிலிருந்து அவர்கள் பணிபுரியும் கடைக்கு சென்று கொண்டிருந்தபோது இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களை பெற்றோரிடம் சேர்ப்பிக்க பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(ஐ)

# அதிவேக வீதிகள் மூலம் வருமானம் அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 26

அதிவேக வீதியை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பால் 40 வீதம் வருமானம் அதிகரித்துள்ளது என்று வீதி அபிவிருத்தி அதிகார சபை பதிவு செய்துள்ளதாக அதன் பணிப்பாளர் நாயகம் எல். வி. எஸ். வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் நாட்டின் அதிவேக வீதிகளை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வழமையை விட 40 சதவீத வருமான அதிகரிப்பை வீதி அபிவிருத்தி அதிகார சபை பதிவு செய்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# அடகு வைத்த பொருட்களை மீட்க சென்றவர் மோதலில் பலி!

கொழும்பு, டிசெ 26

பொருட்களை அடகு வைத்தவருக்கும் அவற்றை அடகு பிடித்தவருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரிழந்தார்.

புத்தளம் - மாரவில - கொடால் கொடவத்தை பிர தேசத்தில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் 34 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கொலையானார்.

உயிரிழந்த நபர் வேறு ஒருவரிடம் தான் அடகு வைத்த தொலைக்காட்சி பெட்டி மற்றும் கைபேசியை மீட்க சென்றுள்ளார். இதன் போது இருவரிடையேயும் வாக்குவாதம் ஏற்பட்டது. இந்தத் தர்க்கமே கொலையில் முடிவடைந்தது.

பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். இதனிடையே, கொலை சந்தேக நபர் அங்கிருந்து தப்பியோடியுள்ளார். அவரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# தாமரை கோபுரத்தை இதுவரை 14 இலட்சம் பேர் பார்வையிட்டனர்!

கொழும்பு, டிசெ. 26

தாமரை கோபுரத்தை பார்வையிட வருவோரின் தொகை அதிகரித்துள்ளதாக தாமரை கோபுர முகாமை நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி, தாமரை கோபுரம் பொது மக்களின் பாவனைக்காக திறக்கப்பட்டது தொடக்கம் இதுவரை 14 இலட்சம் பார்வையாளர்கள் பார்வையிட்டுள்ளனர். இதில், 42 ஆயிரத்து 297 வெளிநாட்டவர்களாவர்.

நேற்று முன்தினம் தாமரைக் கோபுரத்தை பார்வையிட 7 ஆயிரத்து 522 பேர் வருகை தந்துள்ளனர். உள்ளூரிலிருந்து 7,285 பார்வையாளர்களும் வெளிநாட்டிலிருந்து 237 பார்வையாளர்களும் தாமரை கோபுரத்தை பார்வையிட்டனர்.

(ஐ)



# சிறுமியுடன் காதல்; பிக்குவுக்கு மறியல்!

கொழும்பு, டிசெ. 26

14 வயது சிறுமியுடன் ஏற்பட்ட காதலை தொடர்ந்து, அவரை விகாரையில் நான்கு நாட்கள் தடுத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் பிக்கு ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கம்பஹா - மீரிகம பிரதேசத்தில் இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

16 வயதான பிக்குவுக்கும் 14 வயது சிறுமிக்கும் காதல் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், சிறுமியை விகாரைக்கு அழைத்து சென்ற பிக்கு அங்கு அவரை 4 நாட்கள் தடுத்து வைத்துள்ளார். இது தொடர்பில் சிறுமியின் பெற்றோர் அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் பிக்குவை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட பிக்கு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். அவரை, ஜனவரி 4ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு அத்தனகல நீதிவான் உத்தரவிட்டார்.

(ஐ)



## மட்டு. பொலிஸ் தலைமையகத்தில் பாலன் குடில் திறந்து வைக்கப்பட்டது

மட்டக்களப்பு, டிசெ. 26

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலைய முன்றலில் அமைக்கப்பட்ட பாலன் குடில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில், கிறிஸ்து பிறப்பு பண்டிகையை சிறப்பிக்கும் வகையில் மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரியந்த பண்டாரவின் ஆலோசனைக்கு அமைய பொலிஸ் நிலைய வளாக முன்றலில், பொலிஸ் உத்தியோகத்தர்களால் அமைக்கப்பட்ட பாலன் குடில் அமைக்கப்பட்டது.

இந்த பாலன் குடில் அருட்தந்தை பி. ஜெரோம் போல் அடிகளாரின் விசேட வழிபாடு நடத்திய பின்னர், பாலன் குடில் ஒளியூட்டும் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

## மட்டு. சிறையிலிருந்து 45 கைதிகள் விடுதலை!

மட்டக்களப்பு, டிசெ. 26

மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து 2 பெண் கைதிகள் உட்பட 45 கைதிகள் நத்தார் பண்டிகை தினமான நேற்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டனர் என்று சிறைச்சாலை அத்தியட்சகர் என். பிரபாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் என். பிரபாகரன் தலைமையில் நடைபெற்ற கைதிகள் விடுதலை செய்யப்படும் நிகழ்வில் பிரதம ஜெயிலர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

சிறு குற்றம் புரிந்த, தண்டனை பணம் செலுத்தாத கைதிகளே நேற்றைய தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலை செய்யப்பட்ட கைதிகள் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு நன்றி செலுத்திய பின்னர் வீடுகளுக்கு சென்றனர்.

### சுனாமி அழிவு நிகழ்ந்து 19 ஆண்டுகள்

# உயிரிழந்தோரை நினைவேந்த கிழக்கு மாகாணம் தயார் நிலை!

நிந்தவூர், டிசெ. 26

**கடற்கோள் அனர்த்தம் எனப்படும் சுனாமி ஏற்பட்ட 19ஆவது வருட நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை நாடளாவிய ரீதியில் உணர்வெழுச்சிபூர்வமாக நடைபெறவுள்ளது. குறிப்பாக, சுனாமி அனர்த்தம் காரணமாக மிக மோசமான கூடிய உயிரிழப்புகளையும் சொத்து இழப்புகளையும் சந்தித்த கிழக்கு மாகாணத்தில் இந்த நினைவேந்தல் நிகழ்வுகளுக்காக பொது மக்கள் தயாராகியுள்ளனர்.**

19 ஆவது வருட நினைவேந்தலையொட்டி கிழக்கின் பல்வேறு பிரதேசங்களிலும் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தமிழ் பிரதேசங்களில் சுனாமி நினைவுத் தூபிகள் அமைந்துள்ள இடங்களில் நினைவஞ்சலி நிகழ்வுகள், நினைவு பேருரைகள், சிரமதானம் என்பன நடைபெறவுள்ளன.

அத்துடன், இந்து ஆலயங்களில் உயிர் நீத்த உறவுகளுக்காக விசேட பூசை வழிபாடுகளும் இடம்பெறவுள்ளன. இதேபோல் முஸ்லிம் பிரதேசங்களில் பள்ளிவாசல்களிலும், ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட மையவாடி வளாகங்களில் கத்தமுல் குர்ஆன் ஓதி தமாம் செய்யப்படுவதுடன், உயிர் நீத்தவர்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காக விசேட துஆ பிரார்த்தனைகளும் இடம்பெறவுள்ளன.

தேசிய பாதுகாப்பு தினமாக இலங்கையில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இந்தத் தினத்தில் சுனாமி அனர்த்த நினைவுப் பேருரைகளும், சன்மார்க்க சொற்பெழிவுகளும் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

**நிந்தவூரில்...**

சுனாமியால் பெரிதும் பாதிக்கப்பட்ட நிந்தவூரில் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, ஷஹீதாக்கள் (மரணித்தவர்கள்) ஞாபகர்த்த நினைவுப் பேரவை அங்குரார்ப்பண நிகழ்வும், விசேட துஆ பிரார்த்தனையும் நடைபெறவுள்ளது.

இதன்போது, நிந்தவூரில் ஷஹீதாக்கப்பட்ட உறவுகளுக்காகவும், நிந்தவூர் மண்ணிலிருந்து நாட்டின் பாதுகாப்புத் துறையில் பணியாற்றி வீர மரணமடைந்தவர்களின் சேவையை நினைவுகூர்ந்தும் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நிந்தவூர் கடற்கரை பிர்தௌஸ் ஜஷூம்ஆ பள்ளி வாசலின் பேஷ் இமாம் அல்-ஹாபிழ் மௌலவி ஏ.பீ.எம். ஷிம்லி (நஹ்ழி) தலைமையில், மேற்படி பள்ளிவாசலில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இதேவேளை மருதமுனை பிரன்சிப் போரம், மற்றும் ஷம்ஸ் டொப் 97 ஆகிய சமூக அமைப்புகள், பெரிய நீலாவணை பொலிஸாருடன் இணைந்து சுனாமி ஞாபகார்த்த தின சிரமதான நிகழ்வு ஒன்றை நடத்தவுள்ளன. (ஐ-06)



சுனாமி தாக்கத்தால் அழிவடைந்து இன்றும் அதேநிலையில் காணப்படும் வீடு ஒன்று!

## கல்முனையில் குருதிசோகை நோய் கர்ப்பவதி தாய்மாரிடையே உயர்வு!

### மருத்துவர் சகிலா இஸ்ஸதீன் தெரிவிப்பு

கல்முனை, டிசெ. 26

இயற்கை வளங்கள் நிறைந்து, நாலா புறமும் கடலால் சூழப்பட்ட இந்த நாட்டில் இரும்புச்சத்து நிறைந்த உணவுகள் மலிந்து காணப்படுகின்றன. இவ்வாறான அழகிய நாட்டில் வாழ்ந்துகொண்டு குருதிச்சோகை நோயால் பாதிக்கப்படுவது ஆச்சரியமாக உள்ளது என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் திருமதி சகிலா இஸ்ஸதீன் தெரிவித்தார்.

கர்ப்பவதி தாய்மார்களுக்கு ஏற்படுகின்ற குருதிச்சோகை நோயை குறைக்கும் நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சி கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்முனை பிராந்தியத்தில் கர்ப்பவதி தாய்மார்களுக்கு ஏற்படுகின்ற நோய்களில் பெரும்பாலானோருக்கு குருதிச்சோகை இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அதனை குறைக்கும் நோக்கில் கல்முனை பிராந்திய தாய் சேய் நலன் பிரிவு பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

கல்முனை பிராந்தியத்தில் குறிப்பாக கர்ப்பவதி தாய்மார்களுக்கு ஏற்படுகின்ற இந்த நோயானது தற்போது 26 வீதமாகக் காணப்படுகின்றது. இதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகள், உத்தியோகத்தர்களுக்கு முறையான பயிற்சிகளை வழங்கி எதிர்வரும் ஆண்டில் இதனை குறைப்பதற்கு பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

கடல் வளத்தையும் மண் வளத்தையும் கொண்டுள்ள எமது நாட்டில் இரும்புச்சத்து நிறைந்த உணவுகள் மலிந்து காணப்படுகின்றன. இவ்வாறான சூழ்நிலையில் குருதிச்சோகையால் பாதிக்கப்படுவது கவலையான விடயமாகும். கர்பவதி தாய்மார்களின் போசாக்கு உணவு அவர்களது ஆரோக்கிய வாழ்வு தொடர்பாக கவனம் செலுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும் - என்றார். (ஐ)




## கல்முனை ஆதார மருத்துவமனைக்கு உள்விழி வில்லைகள் அன்பளிப்பு!

கல்முனை, டிசெ. 26

கல்முனை ஆதார மருத்துவமனைக்கு இலங்கை கிழக்குப் பிராந்திய சத்ய சாயி சர்வதேச நிறுவனத்தால் நன்கொடையாக 17 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 229 உள்விழி வில்லைகள் வழங்கி வைக்கப்பட்டது.

மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் இரா. முரளீஸ்வரன் மற்றும் கண் சத்திர சிகிச்சை நிபுணர் .என். நிரோஷன் ஆகியோரிடம் இலங்கை கிழக்குப் பிராந்திய சத்ய சாயி சர்வதேச நிறுவனத்தின் தலைவர் ஏ.டி. சுஜன்குமார் மற்றும் உறுப்பினர்களால் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது. (ஐ)

## களுவாஞ்சிக்குடி விபத்தில் கணவன், மனைவி காயம்!

மட்டக்களப்பு, டிசெ. 26

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒந்தாச்சிமடம் பிரதான வீதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் கணவனும், மனைவியும் காயமடைந்தனர்.

ஓட்டமாவடி பகுதியிலிருந்து கல்முனை நோக்கி முச்சக்கர வண்டியில் சென்ற குடும்பத்தினர் ஒந்தாச்சிமடம் பகுதியில் படி ரக வாகனம் ஒன்றில் மோதி விபத்து ஏற்பட்டது. இதில் முச்சக்கர வண்டியை செலுத்திச் சென்ற கணவனும் அதில் பயணித்த அவரின் மனைவியும் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் களுவாஞ்சிக்குடி மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# இந்தியா வந்த கப்பல்மீது செங்கடலில் தாக்குதல்!

புதுடில்லி, டிசெ. 26

மத்திய ஆபிரிக்காவில் உள்ள கபோன் நாட்டின் தேசியக் கொடியுடன் இந்தியா நோக்கி கச்சா எண்ணெயுடன் வந்த எம். வி. சாய்பாபா என்ற கப்பல் மீது செங்கடலில் ஆளில்லா விமானத் தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது என்று இந்திய கடற்படை அதிகாரிகள் தெரி வித்தனர்.

தாக்குதலுக்குள்ளான கப்ப லில் 25 இந்திய பணியாளர்கள் இருந்தனர் என்றும், அவர்கள் பாதுகாப்பாக உள்ளனர் என் றும் அந்த அதிகாரிகள் தெரி வித்தனர்.

முன்னதாக, ஏமனின் ஹெய்ட்டி பயங்கரவாதிகள் நடத் திய ஆளில்லா விமான தாக்குத லுக்கு உள்ளாகியன இரண்டு கப்பல்களில் இந்திய கொடியு டன் பயணித்த கச்சா எண் ணெய் கப்பலும் ஒன்று என்று அமெரிக்கா தெரிவித்திருந் தது.

கடந்த ஒக்ரோபர் 17ஆம் திகதிக்கு பின்னர் செங்கடலில் செல்லும் வணிகக்கப்பல்களின் மீது ஹெய்தி அமைப்பினர் நடத்தும் 14 மற்றும் 15 வது தாக்குதல் இது என்று கூறப் பட்டுள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் மோதல்களுக்கு பின்னர் ஹெய் திகள் தங்களின் தாக்குதல்களை அதிகப்படுத்தியுள்ளனர் என்று யு. எஸ். எஸ். லாபூன் குற்றம் சாட்டியுள்ளது. (ஐ)

# உக்ரைனுடன் போர் நிறுத்தம் தயாராகிறார் ரஷ்ய ஜனாதிபதி

மொஸ்கோ, டிசெ. 26

**உக்ரைனுடன் போர் நிறுத்தத்தை ஏற்படுத்த ரஷ்ய ஜனாதிபதி புடின் முடிவு செய்திருக்கிறார் என்று தகவல் கள் வெளியாகியுள்ளன. ஆனால், இதனை அவர் இது வரை உத்தியோகபூர்வமாக வெளியிடவில்லை.**



ரஷ்யா கடந்த ஆண்டு பெப் ரவரி மாதம் உக்ரேன் மீது போர் தொடுத்தது. உக்ரைனுக் குள் புகுந்த ரஷ்ய படைகள் கணிசமான இடத்தை தங்கள் வசம் கைப்பற்றி வைத்துள்ளன. எனினும், உக்ரைனை இதுவரை ரஷ்யாவால் கைப்பற்ற முடிய வில்லை. மேலும், உக்ரேன் நாட்டுக்கு சர்வதேச அளவில் பல நாடுகள் உதவி செய்து வரு கின்றன.

இதன் காரணமாக ரஷ்யா வால் முழுமையாக போரை முடிக்க இயலவில்லை. இந் நிலையில் உக்ரேன் மீதான படையெடுப்பு காரணமாக ரஷ்யாவுக்கு மிகப்பெரிய பொருளாதார இழப்புகள் ஏற்பட தொடங்கியுள்ளன. இதையடுத்து உக்ரேன் போரை முடிவுக்கு கொண்டுவர ரஷ்ய ஜனாதிபதி புடின் முடிவு செய்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆனால், அதை அவர் இதுவரை அதி காரபூர்வமாக வெளியிட வில்லை. மிக இரகசியமாக அவர் இதற்கான நடவடிக்கை களில் ஈடுபட்டுள்ளார் என்று தெரியவந்துள்ளது.

உக்ரைனுக்கும் தனக்கும் நெருக்கமாக இருக்கும் சிலர் மூலம் போர் நிறுத்தம் செய்ய கடந்த செப்ரெம்பர் புடின் பேச்சு நடத்தினார். அதன் தொடர்ச்சியாக மீண்டும் அவர் போர் நிறுத்த நடவடிக்கை களை மேற்கொண்டுள்ளார் என்று தெரிகிறது. (ஐ)

# அகதிகள் முகாம்மீது தாக்குதல் 70இற்கும் மேற்பட்டோர் மரணம்!

காஸா, டிசெ. 26

காஸாவின் அல் -மகாசி அகதிகள் முகாம்மீது இஸ்ரேல் வான் படை நடத் திய தாக்குதலில் 70இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்த னர் என்று பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள் ளது.



நேற்றுமுன்தினம் மாலை நடத்தப்பட்ட இந்தத் தாக்கு தல் தொடர்பில், சுகாதார அமைச்சின் செய்தி தொடர் பாளர் அஷ்ரப் அல் - குத்ரா கூறுகையில்,

“நெரிசலான குடியி ருப்புகள் இருக்கும் அல்- மகாசி அகதிகள் முகாமின் மீது நிகழ்த்தப்பட்ட வான் வழித் தாக்குதல் மாபெரும் படுகொலை. 70இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்த னர். உயிர் பிழைத்தவர்களை கண்டுபிடிக்கும் முயற்சியில் அவர்களது குடும்பங்கள் இடிபாடுகளுக்குள் தேடிக் கொண்டிருக்கிறது. பல வீடுகள் அழிக்கப்பட்டுள் ளன. நாங்கள் அனைவரும் இலக்கு வைக்கப்பட்டிருக்கி றோம். இனி காஸாவில் பாதுகாப் பான இடம் என்று எதுவும் இல்லை” என்றார்.

இது குறித்து தனியார் செய்தி நிறுவனம் அளித்தி ருக்கும் அறிக்கையில்,

”அல்-மகாசி அகதிகள் முகாம் காஸா பகுதியின் மத் தியில் மிகவும் அடர்த்தியான மக்கள் தொகை கொண்ட பகுதிகளில் ஒன்று. இப் போது முகாம் முற்றிலும் தரைமட்டமாகியிருக்கிறது. இந்த இனப்படுகொலையில் பிறந்து இரண்டு வாரங்களே யான குழந்தை உட்பட, உயிரிழந்தவர்கள் அனைவ ரும் பொதுமக்கள். கடந்த வாரம் வடக்கு காஸாவில் உள்ள ஜபாலியா அகதிகள் முகாமில் நடத்தப்பட்ட தாக்குதலில் 90 பேர் கொல லப்பட்டனர். அல் - மகாசி முகாம் கடந்த மாதமும் தாக்கப்பட்டது. அப்போது 50 பலஸ்தீனியர்கள் கொல லப்பட்டனர் - என்று கூறி யுள்ளது.

இதேசமயம், காஸாவில் கடந்த 7ஆம் திகதி ஆரம்ப மான போரில் இதுவரை 20 ஆயிரத்து 400இற்கும் மேற் பட்ட பலஸ்தீனர்கள் கொல லப்பட்டனர். 80 சத வீதத்துக் கும் அதிகமானவர்கள் இடம் பெயர்ந்துள்ளனர். (ஐ)

# ஹமாஸ் நடத்திய தாக்குதலில் 13 இஸ்ரேல் படையினர் பலி!

டெல் அவிவ், டிசெ.26

தெற்கு காஸாவில் ஹமாஸ் நடத்திய திடீர் தாக்குதலில் 13 இஸ்ரேலிய இராணுவத்தினர் உயிரிழந்தனர்.

இஸ்ரேல்மீது ஹமாஸ் அமைப்பினர் நடத்திய கொடூர தாக்குதலை தொடர்ந்து காஸா மீது இஸ்ரேல் கடந்த ஒக்ரோ பர் 7ஆம் திகதி போரை தொடங்கியது. இந்தத் தாக்கு தல் தற்போது வேகமெடுத்துள் ளது.

இதேநேரம் தெற்கு காஸா வில் நேற்று முன்தினம் ஹமாஸ் அமைப்பினர் நடத்திய திடீர் தாக்குதலில் 13 இஸ்ரேல் படையினர் உயிரிழந்தனர்.

இதன் மூலம் காஸாவில் தரைவழி தாக்குதலை தொடங் கியதில் இருந்து உயிரிழந்த இஸ்ரேல் இராணுவத்தினரின் எண்ணிக்கை 152ஆக உயர்ந் துள்ளது. அதே சமயம் போர் தொடங்கியதில் இருந்து தற் போது வரை மொத்தம் 485 இஸ்ரேல் படையினர் பலியா கினர் என்று இஸ்ரேல் இராணு வம் தெரிவித்துள்ளது. (ஐ)

# இன்குபேட்டரில் குழந்தை இயேசு

பெத்லஹேம், டிசெ. 25

இஸ்ரேலிய தாக்குதல்களால் பலஸ்தீன சிறுவர்கள் மற்றும் குழந்தைகள் இறந்தமை குறித்து ஆழ்ந்த கவலையை கொண்டுள்ள பலஸ்தீன கலை ஞர் ராணா பிஷாரா, நத்தார் பண்டிகைக்காக குழந்தை இயேசு வின் சிலையைப் பயன் படுத்தி ஒரு புதிய கலைப் படைப்பை வெளி யிட்டுள் ளார்.



ராணாவின் கலைப்படைப்பு குழந்தை இயேசுவை இன்கு பேட்டரில் (Incubator) காட்டுகிறது.

இன்குபேட்டரில் குழந்தை இயேசு வைக்கப்பட்டுள்ளதை காட்டும் இந்த கலைப் படைப்பை பெத்லஹேம் தேவா லயத்தின் முன் காணலாம்.

குழந்தை இயேசு பெத்ல ஹேமில் பிறந்தார். பெத்ல ஹேம் இன்று பெரும்பாலான பலஸ்தீனியர்கள் வாழும் மேற் குக் கரைக்கு சொந்தமானது.

அத்துடன், பலஸ்தீனியர்கள் காஸா பகுதியில் வசிக்கின்றனர். காஸா பகுதியைக் கட்டுப் படுத்தும் ஹமாஸ் மற்றும் இஸ்ரேலிய படைகளுக்கு இடையே போர் நடந்து வரு கிறது.

காஸா பகுதியில் உள்ள மருத்துவமனைகள்மீது இஸ் ரேல் படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன.

காஸாவிலுள்ள அனைத்து மருத்துவமனைகளும் தாக்கு தல்களால் முடங்கின என்று கூறப்படுகின்றது.

வான்வழித் தாக்குதல்க ளுக்கு நடுவே, மருத்துவமனை களில் குறைப்பிரசவமான குழந் தைகள் இன்குபேட்டர் இன்றி எகிப்தில் உள்ள மருத்துவ மனைகளுக்குக் கொண்டுசெல் லப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

ராணா பிஷாரா, தமது கலைப்படைப்பு குறித்து ஊட கங்களுக்கு கருத்துத் தெரி விக்கையில், இன்று குழந்தை இயேசு பிறந்தால், அவர் ஒரு போருக்கு நடுவில் பிறப்பார் என கூறியுள்ளார்.

# புலிகளின் இறப்பு சடுதியாக உயர்வு

புதுடில்லி, டிசெ. 26

இந்தியாவில் கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அள விற்கு இந்த ஆண்டு 202 புலிகள் உயிரிழந்தன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்திய வனவிலங்கு பாது காப்பு அமைப்பு இதனை தெரி வித்துள்ளது.

இதன்படி, மகாராஷ்டிரா மாநிலத்தில் அதிகபட்சமாக 52 புலிகள் உயிரிழந்தன.

அத்துடன், மத்திய பிர தேசத்தில் 47 புலிகளும் உத்தர காண்ட் மாநிலத்தில் 26 புலிக ளும் தமிழ்நாட்டில் 15 புலிகள் உயிரிழந்தன என்று தெரிவிக் கப்பட்டது. (ஐ)



உக்ரைன் முதன்முறையாக டிசெம்பர் 25ஆம் திகதி ( நேற்று ) கிறிஸ்மஸ் தினத்தை கொண்டாடியது. இதுவரை காலமும் ரஷ்ய கலண்டரின்படி ஜனவரி 7ஆம் திகதியே அங்கு கிறிஸ்மஸ் கொண்டாடப்பட்டது.

படம் – போரின் மத்தியில் கிறிஸ்மஸ் பிரார்த்தனையில் ஈடுபடும் உக்ரைன் படையினர்....!

# மேலும் 4 இலட்சம் குடும்பங்களுக்கு அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு

## நிதி இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு



**கொழும்பு, டிசெ. 25**

**அஸ்வெசும நலன்புரி திட்டத்தில் நன்மை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கையை 20 இலட்சத்தில் இருந்து 24 இலட்சமாக அதிகரிக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. பயனாளிகளுக்கான நன்மைகள் எந்த வகையிலும் குறைக்கப்படமாட்டாது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.**

கேகாலை - தெரணியகலை நடந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேவையான போது பாராளுமன்றத்தில் உண்மைகளை முன்வைத்து நன்மைகளை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு இந்த வேலைத்திட்டத்தில் சந்தர்ப்பம் உள்ளது. இதன்படி, எதிர்வரும் ஜனவரி மாதம் விண்ணப்பங்கள் அளிக்கப்பட்டு, பயனாளிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இம்முறைமை ஊடாக தற்போது நன்மைகளை பெற்றுக் கொண்டிருக்கும் குடும்பங்களின் தகவல்கள் உறுதிப்படுத்தப்படுவதுடன், கடந்த முறை விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியாமல் போனவர்கள், பல்வேறு அநீதிகளுக்கு ஆளானவர்களுக்கும் வாய்ப்பு கிடைக்கும்.

2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நலத்திட்ட உதவிகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 6 ஆயிரம் - 6 ஆயிரத்து 500 கோடி ரூபாயாக இருந்தது. ஆனால், இம்முறை 20 ஆயிரத்து 500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, பயனாளிகளுக்கு வழங்கப்படும் சலுகைகள் எந்த வகையிலும் குறைக்கப்படாது.

பிரச்னைக்கு நடைமுறை தீர்வு காண்பதே ஜனாதிபதியின் நோக்கம். இதன்படி, இந்தத் திட்டம் பயனாளிகளை மானியம் தேவையில்லாத மக்களாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது - என்றும் கூறினார். (ஐ)

# வீட்டில் கசிப்பு காய்ச்சிய சமாதான நீதிவான் கைது!

கொழும்பு, டிசெ. 26

வீடொன்றில் சட்டவிரோதமாக கசிப்பு காய்ச்சிய நிலையில் சமாதான நீதிவானும் அவரின் உதவியாளர் ஒருவரும் கைது செய்யப்பட்டனர் என்று மேல் மாகாண தெற்கு மாவட்ட குற்றப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு - வெல்லம்பிட்டியில் கைது செய்யப்பட்ட இந்த சந்தேக நபர்களிடம் இருந்து 22 லீற்றர் கசிப்பு, நான்கு பீப்பாய்களில் 7 ஆயிரம் லீற்றர் கோடா மற்றும் கசிப்பு காய்ச்சுவதற்கான பொருட்களும் கைப்பற்றப்பட்டன.

மேல் மாகாண தெற்கு மாவட்ட குற்றப்பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைவாகவே இந்தக் கைது இடம்பெற்றது. (ஐ)

# தொழிலதிபரின் வீட்டில் ரூ. 70 இலட்சம் திருட்டு!

புத்தளம், டிசெ. 26

பிரபல தொழிலதிபரின் வீட்டை உடைத்து நகைகள், பெறுமதியான பொருட்கள் மற்றும் பணம் என 70 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளது.

புத்தளம் - உடப்பை சேர்ந்த பிரபல தேங்காய், இறால் பண்ணை உரிமையாளரான தொழிலதிபர் ஒருவரின் வீட்டில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை திருட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டிலிருந்தவர்கள் குடும்பத்துடன் வெளியில் சென்றிருந்த சமயம், வீட்டின் யன்னலை உடைத்து இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை உடப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பொலிஸ் பொறுப்பதிகாரியை தாக்கிய படை சிப்பாய் கைது!

கொழும்பு, டிசெ. 26

பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கமைய, அது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டிருந்த உப பொலிஸ் பரிசோதகரை தாக்கிய சம்பவம் தொடர்பில் விமானப்படை சிப்பாய் கைது செய்யப்பட்டார் என்று கல்கிரியாகம பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பணியாற்றுபவர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விமானப்படை சிப்பாய்க்கு எதிராக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் பேரில் பிரதிவாதியாக அழைக்கப்பட்டு முறைப்பாடு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். அப்போது, அவர் உதவி பொலிஸ் பொறுப்பதிகாரியின் கன்னத்தில் பல முறை அறைந்தார் என்று கூறப்படுகின்றது.

சம்பவத்தில் காயமடைந்த உப பொலிஸ் பரிசோதகர் கல்கிரியாகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

# இணைய பாதுகாப்பு சட்டமூலம் குறித்து ஜன. 23இல் பாராளுமன்றில் விவாதம்!

கொழும்பு, டிசெ. 26

மூன்று மாத ஆலோசனை செயல்முறையை நடத்த வேண்டும் என சிவில் சமூக அமைப்புகள் வலியுறுத்தினாலும் ஜனவரி 23 ஆம் திகதி இணைய பாதுகாப்பு சட்டமூலத்தை எடுக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்து.

பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இந்த சட்டமூலத்தை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இணைய பாதுகாப்புக்காக இதுபோன்ற சட்டமூலத்தை அமுல்படுத்த வேண்டியதன் அவசியத்தை உச்ச நீதிமன்றம் வலியுறுத்தியுள்ளது.

இதனிடையே, சிவில் சமூக இயக்கங்கள் சட்டமூலத்தில் இணைக்கப்பட வேண்டிய தொழில்துறை பங்குதாரர்களின் கருத்துக்களைப் பெற மூன்று மாத ஆலோசனை செயல்முறையை நாடியது. சிவில் சமூகப் பிரதிநிதிகள் குழுவும் பங்குதாரர்களுடன் கலந்தாலோசிக்க சிங்கப்பூர் சென்றது.

இந்த சட்டமூலம் சிங்கப்பூரின் ஒன்லைன் பொய்மைகள் மற்றும் கையாளுதல் சட்டத்திலிருந்து பரவலாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 23ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள பாராளுமன்ற வாரத்தில் இந்த சட்டமூலம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு சட்டமாக்கப்படும் என பாராளுமன்ற விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் ஆலோசகர் பேராசிரியர் அஷு மாரசிங்க உறுதிப்படுத்தியுள்ளார்.

கூகுள் மற்றும் பேஸ்புக் போன்ற தொழில்துறை பங்குதாரர்களின் உள்ளீடுகளை இந்தச் சட்டமூலத்தின் இறுதிச் சட்டத்தில் இணைப்பதற்கு அமைச்சு காத்திருக்கிறது என பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார். (ஐ)

# பாதாள உலக குழு தலைவரும் உதவியாளும் சடலங்களாக மீட்பு

கொழும்பு, டிசெ. 26

பாதள உலகக் குழு ஒன்றின் தலைவரான மண்ணா ரொஷான் என அழைக்கப் படும் ரொஷான் இந்திக மற் றும் அவரின் உதவியாளர் சடலங்களாக கண்டுபிடிக்கப்பட்டனர்.

பொலிஸ் அவசர இலக்கத்துக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை இரண்டு மணியளவில் இரண்டு சடலங்களும் கண்டெடுக்கப்பட்டன என்று பாதுக்க பொலிஸார் தெரிவித்தனர்.

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சாம்பல் நிற ஜீப்புக்குள் ஒரு சடலமும் அருகாமையில் மற்றைய சடலமும் காணப்பட்டன. ஜீப்புக்குள் கண்டெடுக்கப்பட்ட சடலம் பாதாள உலகக் குழு தலைவர் மன்னா ரொஷான் என அழைக்கப்படும் ரொஷான் இந்திக என அடையாளம் காணப்பட்டுள்ளார். மற்றைய சடலம் அவரின் உதவியாளுடையதாக இருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# ஜே. என். -1 கோவிட் பரவலை கையாள்வதற்கு அரசு தயார்

கொழும்பு, டிசெ. 26

புதிய ஜே. என். -1 வகை கோவிட் பரவலை கையாள சுகாதார அமைச்சு தயாராக இருப்பதாக அமைச்சின் செயலாளர் நிபுணர் மருத்துவர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

இதன்படி, நாளாந்தம் பதிவாகும் நோயாளர்களின் மாதிரிகள் பொரளை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம், கொழும்பு மற்றும் கண்டி தேசிய மருத்துவமனைகளுக்கு உட்பட 19 மருத்துவமனைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டு அது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, புதிய ஜே. என். -1 கோவிட் வகை இலங்கைக்குள் பிரவேசித்துள்ளபோதிலும், அது தொடர்பான மரபணு பரிசோதனைகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என சுகாதாரத் துறையினர் குற்றம் சுமத்தியுள்ளனர். (ஐ)

# ரியூனியன் தீவில் தடுத்து வைக்கப்பட்ட 14 இலங்கையர் திருப்பி அனுப்பப்பட்டனர்

கொழும்பு, டிசெ. 26

பிரான்ஸுக்கு புலம்பெயரும் நோக்கில் சட்டவிரோதமாக சென்ற 14 இலங்கையர்கள் மீண்டும் அனுப்பப்பட்டுள்ளனர். பிரான்ஸுக்கு சொந்தமான ரியூனியன் தீவுகளுக்கு சென்றவர்களே இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்று இலங்கை கடற்படை தெரிவித்தது. 2019ஆம் ஆண்டு முதல் அண்மைக்காலம் வரை பல நாள் மீன் பிடி படகுகளில் சென்று இவர்கள் ரியூனியன் தீவை அடைந்திருந்தனர். இவ்வாறு அங்கு தங்கியிருந்த 14 பேரே விமானம் மூலம் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டவர்கள் பேருவளை, சிலாபம் மற்றும் களு வாஞ்சிக்குடி பகுதியைச் சேர்ந்த 21 முதல் 60 வயதுடையவர்களாவர்.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் மற்றும் பொலிஸார் இந்த சட்ட விரோத குடியேற்றவாசிகள் தொடர்பான மேலதிக சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## பொது...

ஒருவரை கள மிறக்குவது தொடர் பாக அவரிடம் வினவப்பட்ட போது அவர் தெரிவித்தவை வருமாறு,

வடக்கு - கிழக்கு தமிழ் மக்க ளின் ஏகோபித்த கட்சியே தமிழரச ுக் கட்சி. ஒரு சில தமிழ் கட்சிகள் அவசரப்பட்டு தீர்மானம் எடுப்பது போல் நாம் தீர்மானம் எதனையும் எடுக்க முடியாது. தமிழ் மக்கள் பக் கம் நின்றே நாம் தீர்க்கமான முடிவு எடுப்போம். ஜனாதிபதி தேர்தல் தொடர்பிலோ, அதன் வேட்பாளர் தொடர்பிலோ நாம் அவசரப் படமாட்டோம். முதலில் உத்தியோகபூர்வ தேர்தல் அறிவிப்பு வரட்டும். அதன்பின்னர் அது பற்றி யோசிப்போம்." - என்றார். (ஐ)

## கோவிட்...

செலுத்தப்படும். எவ்வாறிருப்பினும் இதனால் ஏற்படக்கூடிய பொது சுகாதார அச்சுறுத்தல் குறைவாகவே காணப்படுவதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

எவ்வாறிருப்பினும் வடக்கு அரைக் கோளத்தில் குளிர்காலம் தொடங்குவதால், இந்த துணை வகை மற்றும் இன்ப்ளூவன்ஸா உள்ளிட்ட பிற சுவாச நோய்கள் அந்த பகுதிகளை பாதிக்கும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது. ஜே. என்.-1 பிறழ்வு இந்தியா, சீனா, இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா போன்ற பல நாடுகளில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

தற்போதைய உலகளாவிய சூழ் நிலையை கருத்தில் கொண்டு , சுகாதார அமைச்சானது உலக சுகாதார ஸ்தாபனத்தின் தென்கிழக்காசிய பிராந்திய பணிமனையுடன் கலந்தாலோசித்து, 19 பிரதான மருத்துவமனைகளில் சுவாச நோய்களின் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை வலுப்படுத்தியுள்ளது. கோவிட் தொற்றை இனங்காண்பதற்கான பரிசோதனைகளை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் ஜே. என்.-1 பரவும் அபாயத்தை மதிப்பிடுவதற்கு மரபணு பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்துக்கு ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், அதற்கேற்ப மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தில் தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த சில மாதங்களாக இலங்கையில் நடத்தப்பட்ட சோதனைகளில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான கோவிட் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். எனினும், கடந்த சில நாட்களாக, சிறப்பு கவனம் செலுத்தி, தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின்படி, முக்கிய மருத்துவமனைகளில் இருந்து மாதிரிகள் பெறப்பட்டு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்துக்கு பரிசோதனைக்காக அனுப்பப்பட்டன. எந்த மாதிரியிலும் கோவிட்-19 தொற்று அடையாளம் காணப்படவில்லை

எனவே, தற்போதைய தரவுகளின்படி, கோவிட் வைரஸின் உப பிறழ்வான ஜே. என். -1 இலங்கையில் தொற்றுவதற்கான ஆபத்து மிகக் குறைவாகும். நிபுணர்களின் ஆலோசனையின்படி, காய்ச்சல் மற்றும் பிற சுவாச நோய்கள் பரவுவதை தடுக்க, மூடிய , காற்றோட்டம் அற்ற, நெரிசலான இடங்களில் முகக்கவசங்களை அணிவது , அடிக்கடி கைகளைக் கழுவுதல் , இடைவெளியை பேணுதல் , இருமல் மற்றும் தும்மல் இருந்தால் மருத்துவ ஆலோசனை பெறுதல் என்பவற்றின் மூலம் நோய் பரவுவதற்கான வாய்ப்புகளை குறைத்துக் கொள்ள முடியும்.

குறிப்பாக, 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், நாள்பட்ட நோய்கள் உள்ளவர்கள் மற்றும் கர்ப்பவதி தாய்மார்கள் சுவாச நோய்களால் பாதிக்கப்பட்டால் உடனடியாக மருத்துவர்களை அணுக வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## 2,163 பேர்...

செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்தத் தகவலை தெரிவித்தார்.

மதுபோதையில் வாகனம் செலுத்தியமையே அதிக விபத்துகளுக்கு காரணமாக அமைந்துள்ளது. எனவே, மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களை கண்டறிய விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது என்றும் அவர் கூறினார்.

## ஆழிப்பேரலை...

2004 டிசெம்பர் 26 ஆழிப்பேரலை அனர்த்தத்தால் வடமராட்சி கிழக்கில் ஆயிரத்து 2 பேர் உயிரிழந்தனர். இவர்களில் 695 பேரின் உடலங்கள் உடுத்துறை சுனாமி நினைவாலயத்தில் அடக்கம் செய்யப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வடக்கு - கிழக்கு மாகாணங்களின் சகல மாவட்டங்களிலும் நினைவேந்தலுக்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. சுனாமி தாக்கிய நேரமான 9. 25 மணிக்கு நினைவேந்தல்கள் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டது

2004 டிசெம்பர் 26 அன்று சுமாத்திரா தீவுக்கு அண்மையாக கடலில் 9.3 ரிக்டர் அளவில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் ஆழிப் பேரலை ஏற்பட்டது. இலங்கை, இந்தியா, இந்தோனேசியா உட்பட 6 நாடுகளை தாக் கிய இந்த ஆழிப்பேரலையால் ஒரு இலட் சத்து 84 ஆயிரத்து 167 பேரின் மரணம் உறுதிப்படுத்தப்பட்டது. 43 ஆயிரம் பேர் வரை காணாமல் போயினர் அல்லது அவர்களின் மரணம் உறுதிப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மார்கழி...

புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை மாலை 4.45 முதல் இரவு 9.15வரை மார்கழி இசைவிழா நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. வர்த்தகக் கண் காட்சி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்த இசைவிழா மற்றும் சிறிய, நடுத்தர உற்பத்தியாளர்களது கண்காட்சி - விற்பனையை இந்தியத் துணைத்தூதரகம், நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டு கலைக்கூடல், யாழ் வணிகர் கழகம் என்பன இணைந்து யாழ்ப்பாணம் மத்திய கலாசார மண்டபத்தில் நடத்தவுள்ளன.

இந்த நிகழ்வில் புகழ்பூத்த இலங்கைக் கலைஞர்கள், இந்தியக் கலைஞர்கள் பங்குபற்றவுள்ளார்கள். மேலும், தவில் நாதஸ்வர இசைச் சங்கமம், விரலோசை வயலின் கச்சேரி, நாத சங்கமம், விரலிசை கானம், நாட்டிய நாடகம், மற்றும் இந்தியக் கலைஞர்களின் பரத நாட்டிய நடன நிகழ்ச்சி, நாட்டுக்கூத்து போன்ற நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இதே வேளை மண்டபத்தின் வெளிப்புறத்திடலில் காலை 9 மணிமுதல் இரவு 9.30 வரை சுமார் 140 காட்சிக்கூடங்கள் அமைக்கப்பட்டு வடக்கு மாகாணத்தை சேர்ந்த சிறிய, நடுத்தர உள்ளூர் உற்பத்தியாளர்களின் தரம் வாய்ந்த உற்பத்திப் பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும் மற்றும் வெளிநாட்டுக்கான சந்தை வாய்ப்பும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது வடமாகாணத்தை சேர்ந்த உற்பத்தியாளர்களின் மாபெரும் கண்காட்சியாக அமையவுள்ளது. இந்த இரு நிகழ்வுகளுக்குமான பிரவேசம் இலவசம். ஆகவே, வடமாகாண மக்களின் கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களை பாதுகாக்கும் இசைநிகழ்விலும், மற்றும் வட மாகாண உள்ளூர் உற்பத்தியை மேம்படுத்துவதன் மூலம் தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்யும் உள்ளூர் உற்பத்தியாளர்களை மேம்படுத்தும் நோக்கில் நடைபெற இருக்கும் வர்த்தகக் கண்காட்சிக்கும் பொது மக்களை கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் யாழ். வணிகர் கழகம் அழைப்பு விடுத்தது. (ஐ-03)

# கைபேசிக்கான வற் வரியை அரசாங்கம் நீக்க வேண்டும்!

### கைபேசி இறக்குமதியாளர்கள் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 26

வற் வரி விலக்கு பட்டியலில் இருந்து கைபேசிகளை நீக்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்யுமாறு இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட கைபேசி இறக்குமதியாளர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஜனவரி 1, 2024 முதல் வற் 15வீதம் முதல் 18 வீதமாக ஒரே நேரத்தில் அதிகரிக்கப்படுவதால், கைபேசி சார் தொழில் கடுமையாக பாதிக்கப்படும் மற்றும் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நேரடி வேலை வாய்ப்புகள் ஆபத்தில் இருக்கும் என்று கைபேசிகள் மற்றும் அதன் பாகங்கள் இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வற் வரி அதிகரிப்பு அறிவிக்கப்படுவதற்கு முன்னரே கைபேசி இறக்குமதியாளர்களின் பிரச்னைகள் தொடர்பில் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவிடம் தெரிவிக்கப்பட்டபோதிலும் நல்ல பதில் கிடைக்கவில்லை எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கைபேசிகள் மற்றும் உபகரணங்களின் விலை அதிகரிப்பால் சந்தையில் போலிப் பொருட்கள் அதிகரித்து அரசாங்கத்துக்கு கிடைக்கும் வரி வருமானம் இழக்கப்படும் அபாயமும் உள்ளது என்று கைபேசி இறக்குமதியாளர்கள் தெரிவித்தனர். (ஐ)

# கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டன!

கொழும்பு, டிசெ. 26

சர்ச்சைக்குரிய மருந்து கொள்வனவு தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தால் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் அரச இரசாயன பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஆவணங்களில் காணப்படும் கையொப்பங்களை பரிசோதிப்பதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் சமன் ரத்நாயக்கவின் பணிமனையில் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் உள்ளிட்ட மேலும் சில ஆவணங்கள் அரச இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக குறித்த அதிகாரி கூறினார்.

சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் சமன் ரத்நாயக்கவிடம் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் கடந்த 20ஆம் திகதி விசாரணை நடத்தியிருந்தனர். சர்ச்சைக்குரிய ஹியூமன் இமியூனோகுளோபியூலின் மருந்து கொள்வனவு தொடர்பில் குறித்த விசாரணை இடம்பெற்றது.

குறித்த பணிமனையில் காணப்பட்ட ஆவணங்களும் 2 நாட்களாக பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. சம்பவம் தொடர்பில் சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக சிறீ சந்திரகுப்த, குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஐ)

## மதுபானத்தின்...

அடங்கிய போத்தல்கள் மீதான வற் வரியைச் சேர்த்தமையே இதற்கு காரணம் என்றும் அந்த நிறுவனங்கள் தெரிவித்தன.

இதற்கமைய, தற்போது 3 ஆயிரத்து 260 ரூபாய்க்கு விற்பனையாகும் விசேட வகை மதுபான போத்தல் 90 ரூபாயால் அதிகரிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## முதியவர்...

நிலையில் மரணமானார்.

அவரின் மரணம் தொடர்பாக கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வே. பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு உத்தரவிட்டிருந்தார்.

உடற்கூற்று பரிசோதனையை சட்ட மருத்துவ அதிகாரி கே.வாசுதேவா மேற்கொண்டார். வயிற்றுப் பகுதியில் ஏற்பட்ட காயத்தால் குடல் வெடிப்பு ஏற்பட்டு இரத்த கசிவு ஏற்பட்டதால் உயிரிழந்தார் என்று அறிக்கையிட்டார்.

எனவே, இந்த மரணம் கொலையாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மரண விசாரணை அதிகாரி மருத்துவ அறிக்கையை பருத்தித்துறை நீதிமன்றில் மேலதிக விசாரணைக்காக பாரப்படுத்தியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-02)

## டெங்கு...

பெற்று வந்த நிலையில் மருந்து ஒவ்வாமையால் நேற்று முன்தினம் உயிரிழந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்போது யாழ்ப்பாணத்தில் டெங்கு நோய் பரவல் அதிகமாக உள்ளது. எனவே பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறும் சுகாதார தரப்பினர் தெரிவித்தனர். (ஐ)

## வடக்கு...

அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் அவ்வப்போது மழை பெய்யும். வடக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் பல தடவைகள் மழை பெய்யும்.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

மத்திய மலைநாட்டின் கிழக்கு சரிவுகளிலும் கிழக்கு , ஊவா, வட மத்திய மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு (30-40) கிலோமீற்றர் வரை ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும்.

சப்ரகமுவ, மத்திய மற்றும் மேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படலாம்.

இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# ஊழலை பாதுகாக்கும் அரசாங்கத்தால் நாட்டின் விடுதலை வெகுதொலைவில்!

## கர்தினால் மல்கம் ரஞ்சித்



கொழும்பு, டிசெ. 26

**உயர் நீதிமன்றத்தின் ஆணையை துளியளவும் கவனத்தில் கொள்ளாத போக்கே இன்று எம்நாட்டில் காணப்படுகிறது. ஊழல் வாதிகளை பாதுகாக்கும் அரசாங்கமே எமக்கு கிடைக்கப் பெற்றுள்ளதால் இந்நாடு அதிலிருந்து விடுதலை பெறும் காலம் வெகு தொலைவில் உள்ளதாக கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.**

நத்தார் பண்டிகையை முன்னிட்டு பிரதான நள்ளிரவு ஆராதனை கொழும்பு - கட்டான - ஹல்பே புனித பிரான்ஸிஸ் சேவியர் தேவாலயத்தில் கர்தினால் தலைமையில் நடைபெற்றது. இதன் போது ஆற்றிய உரையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இலங்கையில் ஒரு வேளை உணவைக்கூட சரியாகப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் 80 இலட்சம் மக்கள் காணப்படுகின்றனர் என்று சில மாதங்களுக்கு முன்னர் தெரியவந்தது. அந்த எண்ணிக்கை தற்போது இரு மடங்காகியிருக்கக்கூடும். எதிர்கால கனவுகள் அனைத்தும் சிதைந்து போன நிலையிலேயே நாட்டிலுள்ள பலரும் இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இவற்றுக்கு மத்தியில் வரி சுமையை அதிகரித்து பொருட்களின் விலைகளும் அதிகரித்து, தொழில்களை இழந்து, பிள்ளைகளின் பசியைப் போக்க முடியாத பலரும் இன்று இந்த நாட்டில் உள்ளனர்.

இவ்வாறான நிலையிலும் உலகில் ஊழல், மோசடிகள் அதிகம் காணப்படும் நாடுகள் பட்டியலில் இலங்கை உயர்ந்த இடத்தில் காணப்படுகின்றமை உண்மையில் கவலைக்கு உரியதாகும்.

ஊழல்வாதிகளை பாதுகாக்கும் அரசாங்கமே எமக்கு கிடைக்கப் பெற்றதால் இந்நாடு அதிலிருந்து விடுதலை பெறும் காலம் வெகு தொலைவில் உள்ளது. உயர் நீதிமன்றத்தின் ஆணையை துளியளவும் கூட கவனத்தில் கொள்ளாத, நீதியும் நியாயமும் அற்ற நிலைமைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது. அதிகார மோகத்திலுள்ளவர்களாலேயே நாடு ஆட்சி செய்யப்படுகிறது.

இவ்வாறானவர்களால் இம்முறை நத்தார் பண்டிகையில் வறுமையிலுள்ளவர்களுக்கு கை கொடுப்பதற்கானதாக அமைந்துள்ளதை நாம் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். எனவே, இல்லாதோருக்கும் வறியவருக்கும் தம்மால் இயன்ற உதவிகளை வழங்குமாறு சகல கத்தோலிக்க மற்றும் கத்தோலிக்கம் அல்லாத மக்களிடமும் கேட்டுக் கொள்கின்றோம் - என்றார். (ஐ)

# படகில் கடத்திவரப்பட்ட மஞ்சள் மூடைகள் சிக்கின!

யாழ்ப்பாணம், டிசெ. 26

யாழ்ப்பாணத்துக்கு கடத்திவரப்பட்ட 400 கிலோ கிராம் மஞ்சள் அடங்கிய மூடைகள் படகு ஒன்றில் வைத்து கைப்பற்றப்பட்டன.

இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் காக்கைதீவில் இந்த மஞ்சள் மூடைகள் கைப்பற்றப்பட்டன.

மீன்பிடி படகு ஒன்றிலிருந்து இந்த மஞ்சள் மூடைகள் மீட்கப்பட்டன. கைப்பற்றப்பட்ட மஞ்சள் மூடைகள் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ஐ)

# ஐநூறு மின்நூல்கள் ஒரேநாளில் வெளியீடு



கண்டி, டிசெ. 26

மாணவிகளால் எழுதப்பட்ட 500 மின் நூல்கள் கண்டி மகாமாயா பெண்கள் பாடசாலையில் ஒரே நாளில் நேற்று முன்தினம் இணையத்தில் வெளியிடப்பட்டன.

கண்டி மகாமாயா பெண்கள் பாடசாலையின் ஏற்பாட்டில் நடந்த இந்த கல்விசார் புத்தகம் எழுதும் நிகழ்ச்சிக்காக நாட்டின் தொலைதூர பிரதேசங்களில் இருந்தும் மாணவர்கள் இந்தப் புத்தகங்களை எழுதியமை விசேட அம்சமாகும்.

இந்த 500 புத்தகங்களையும் முதலாம் ஆண்டு முதல் 13 ஆம் ஆண்டு வரை படிக்கும் சுமார் 400 மாணவர்கள் எழுதியுள்ளனர்.

கண்டி மகாமாயா கல்லூரியின் முன்னாள் ஆசிரியை எச்.எம்.செனவிரத்னவின் வழிகாட்டலின் கீழ் பாடசாலை மாணவர்கள் இந்தப் புத்தகங்களை எழுதத் தொடங்கியுள்ளனர். குறித்த ஆசிரியை சுமார் 60,000 புத்தகங்களை எழுதவும் வெளியிடவும் மாணவர்களுக்கு உதவியுள்ளார். (ஐ)

# மருந்துகள் இறக்குமதி மற்றும் விநியோகத்தில் முன்னேற்றம்!

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 26

மருந்துகளின் இறக்குமதி மற்றும் விநியோகத்தில் முன்னேற்றம் காணப்படுகிறது என்று சுகாதார அமைச்சின் செயலாளர் மருத்துவர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

விசேட அறிக்கை மூலம் அவர் இதனைத் தெரிவித்தார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த இரண்டு வாரங்களில் மருந்து இறக்குமதி மற்றும் விநியோகம் தொடர்பில் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கடந்த காலங்களில் மக்களின் சிகிச்சைகளுக்கு அத்தியாவசியமான மருந்துகளை விநியோகிப்பதில் பல பிரச்னைகள் மற்றும் தடைகள் காணப்பட்டன.

எவ்வாறிருப்பினும் கடந்த இரண்டு வாரங்களில், நாட்டிலுள்ள பல்வேறு மருத்துவமனைகளின் நிலவரங்களை ஆராய்ந்த போது அவற்றுக்கு கிடைக்கப் பெற்ற மருந்துகளின் அளவு போன்றவற்றில் முன்னேற்றம் காணப்பட்டது.

மருந்துகளின் விநியோகம் குறித்து ஆழமான கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகிறது. அதற்கமையவே இந்த முன்னேற்றம் அடையாளம் காணப்பட்டுள்ளது. எனினும், குறிப்பிட்ட சில மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. அந்த மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது - என்றுள்ளது. (ஐ)

# மாணவர்களை இலக்குவைத்து போதைப்பொருள் விற்றவர் கைது!

திருகோணமலை, டிசெ. 26

தம்பலகாமத்தில் உயர்தரப் பாடசாலை ஒன்றுக்கு அருகே மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு ஹெரோயின் விற்பனை செய்தவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடம் இருந்து 2 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது.

இராணுவ புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் முகவர் ஒருவரிடமிருந்து போதைப்பொருள் வாங்கும் போர்வையில் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

கைதானவர் சில காலமாக பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து ஹெரோயின் போதைப் பொருளை விற்பனை செய்து வந்துள்ளார். இவர், முள்ளிப்பொத்தானையை சேர்ந்த 23 வயது இளைஞராவார்.

சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக தம்பலகாமம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஐ)

# போதைப்பொருள் சார் குற்றம் மேலும் 533 பேர் கைதாகினர்!

கொழும்பு, டிசெ. 26

நேற்று நள்ளிரவு 12.30 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் போதைப் பொருள் உள்ளிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 533 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.

கைதான சந்தேகநபர்களிடம் இருந்து 273 கிராம் ஹெரோயின், 102 கிராம் ஐஸ், 1.778 கிலோ கிராம் கேரள கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்கள் மீட்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மேல் மாகாணத்திலேயே டெங்கு பரவல் உச்சம்

கொழும்பு, டிசெ. 26

மேல் மாகாணம் டெங்கு அபாயகரமான பிரதேசமாக இனங்காணப்பட்டுள்ளது. நாட்டின் மொத்த டெங்கு நோயாளர்களில் 46 வீதமானவர்கள் மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளனர் என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டுத் திட்டத்தின் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் இதுவரை 38 ஆயிரத்து 890 பேர் டெங்கு தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த வருடத்தின் ஆரம்பம் முதல் நாடு முழுவதிலும் இருந்து 84 ஆயிரத்து 807 பேர் பாதிக்கப்பட்டுள்ளனரெனவும் 50 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளனர். (ஐ)

# அதிகார பரவாலக்கம் தென்னிலங்கை மக்கள் வீண் அச்சம்!

கொழும்பு, டிசெ. 26

மாகாண சபை மற்றும் அதிகார பரவலாக்கம் தொடர்பில் தென்பகுதி மக்கள் தேவையற்ற பயத்தில் உள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரும் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவருமான மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

பொலநறுவை மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பெண்கள், இளைஞர்கள், யுவதிகள் என அனைவரும் தொடர்ச்சியான அரசியலில் பங்குபற்ற வேண்டும். தற்போது மறைக்கப்பட்டுள்ள தேர்தல் செயல்பாடுகள் குறித்து மக்களை அறிவூட்டுவதன் மூலம் மக்களுக்கு மாகாண சபை குறித்து தெளிவூட்டமுடியும். நாட்டின் அபிவிருத்திக்கு மாகாணசபை அதிகாரம் பரவலாக்கப்படல் வேண்டும். மாகாணங்களுக்கிடையே அபிவிருத்திக்கு போட்டிகளை ஏற்படுத்த வேண்டும். தென்பகுதி மாகாண சபை கட்டமைப்பைவிட வடக்கு - கிழக்கு மாகாண சபைகள் குறித்த முறைமையில் விருத்தி கண்டுள்ளன. நிர்வாக அதிகாரங்கள் மட்டுமன்றி பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுமாயின் அதற்கு நாம் இணங்க வேண்டும் - என்றார்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.12.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# ஆழிப் பேரலையில் அழிந்த 'ஆச்சே' பிராந்திய அமைதி தீர்வு !

ஐங்கரன் விக்கினேஸ்வரா

பல ஆண்டுகளாக ஆச்சே தேசம் விடு தலையை மூச்சாக கொண்டு இந்தோனேசியாவிற்கு எதிராக போராடி, பின்னர் ஆழிப் பேரலையின் பாரிய அழிவினால் சர்வதேச மத்தியஸ்தத்துடன் சமாதா னத்தை 2005 ஏற்றுக் கொண்டது.

ஆச்சே தேசத்தின் விடுதலைக்கான போராட்டம் 1990களின் இறுதியிலும் 2000 இன் ஆரம்ப காலப்பகு தியிலும் மிகத் தீவிரம் அடைந்திருந்தது. ஆயினும் 2004 டிசம்பர் 26 இல் ஏற்பட்ட ஆழிப்பேரலையின் அழிவு கள் ஆச்சேனியர்களையும் இந்தோனே சியர்களையும் சமாதானத்தை நோக்கி சிந்திக்க வைத்தது.

அச்சே மக்கள் சுயநிர்ணய உரிமைக்காகவும் சுதேச அடையாளத்திற்காகவும் சுமார் 29 வருடங்கள் தொடர்ந்து போராடினர். தற்போது இந்தோனே சியாவின் ஆதிக்கத்தில் உள்ள ஆச்சே (Aceh) மாநிலத்தின் வடக்குப் பகுதியிலே சுமத்திரா தீவும் தெற்குப் பகுதி யிலே இந்து சமுத்திரமும் அமையப்பெற்றுள்ளன.

கொடிய போரினால் சிந்திய குருதிகளுக்கும், சிதை வடைந்த தேசத்திற்கும் முற்றுப்புள்ளி வைக்க 2004 இந்தியப் பெருங்கடல் ஆழிப்பேரலை சுனாமியின் அழிவுகளும், ஆச்சே விடுதலைக்கான ஆயுத போராட் டத்தை நிறுத்த வழிகோலியது என்பது உண்மையே.

**சுதந்திர ஆச்சே இயக்கம்**

1976 மற்றும் 2005இற்கு இடையில் சுதந்திர ஆச்சே இயக்கம் - Free Aceh Movement - அல்லது "GAM" - Gerakan Aceh Merdeka ஆச்சே மாகாணத்தை சுதந்திரமாக மாற்றும் குறிக்கோளுடன் போராடியது. 2003இல் இந்தோனேசியாவின் ஒரு பாரிய இராணுவ தாக்குதல் நடவடிக்கையும், பின்னர் 2004 இந்தியப் பெருங்கடல் ஆழிப்பேரலை சுனாமியின் அழிவுகளும், ஆச்சே விடுத லைக்கான ஆயுத போராட்டத்தை நிறுத்தியதாக அறிவித்தது. அதன்பின் ஹெல்சிங்கி அமைதி உடன் படிக்கையைக் கொண்டு வந்ததன் மூலம் ஆயுத போராட்டம் முழுமையாக முடிவுற்றது.



ஆச்சே மாநிலம் இந்தோனேசியாவின் மற்ற பகுதி களுக்கு இடையே கலாச்சார, மத வேறுபாடு உள்ளது. பெரும்பாலான இந்தோனேசியாவில் நடைமுறையில் உள்ள இஸ்லாத்தின் மிகவும் பழமைவாத வடிவமானது ஆச்சேவிலும் பரவலாக நடைமுறையில் உள்ளது. முன் னாள் அதிபர் சுஹார்டோவின் 1965-1998 ஆட்சியில் பரந்த தேசியவாத கொள்கைகள் குறிப்பாக ஆச்சேவில் பிரபலமடையவில்லை. அங்கு ஒருங்கிணைக்கப்பட்ட "இந்தோனேசிய கலாச்சாரத்தை" ஊக்குவிக்கும் மத்திய அரசின் கொள்கையால் பலர் வெறுப்படைந்தனர்.






**ஆழிப் பேரலையின் பாரிய அழிவினால் சர்வதேச மத்தியஸ்த்துடன் சமாதானத்தை ஏற்றுக் கொண்ட அச்சே தேச வரலாறு, விடுதலை வேண்டி போராடி அழிந்த மற்றய இனங்களுக்கும் சான்று பகரும் உதாராணமாக அமைகிறது**

**லிபிய கடாபியின் ஆதரவு**

1985 இல், ஆச்சே இயக்கத்திற்கு லிபிய ஆதரவு கிடைக்கப் பெற்றது. ஏகாதிபத்தியம், இனவாதம், சியோனிசம் மற்றும் பாசிசத்திற்கு எதிரான தேசியவாத போராட்டங்களை ஆதரிக்கும் கேணல் கடாபியின் உதவிகளை இவர்களும் பயன்படுத்திக் கொண்டனர். லிபியா பின்னர் ஆச்சே இயக்கத்துக்கு தொடர்ந்து நிதியளித்ததா என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆயினும் ஆச்சே இயக்கம் ஆட்சேர்ப்பு செய்பவர்களுக் கும், மிகவும் தேவையான இராணுவப் பயிற்சியைப் பெறக்கூடிய ஒரு சரணாலயமாக லிபியா விளங்கியது.

1986 முதல் 1990 வரையிலான காலகட்டத்தில் லிபியாவால் பயிற்சி பெற்ற போராளிகளின் எண் ணிக்கை சுமார் 1,000 முதல் 2,000 பேர் இருந்ததாகக் கூறினர். அதே சமயம் இந்தோனேசிய இராணுவத்தின் அறிக்கையில் படி 600 முதல் 800 வரை இருப்பதாகக் கூறினர்.

**சுஹார்டோவின் வீழ்ச்சி**

1999 ஆம் ஆண்டில், ஜாவாவில் ஏற்பட்ட குழப்பம் மற்றும் சுஹார்டோவின் வீழ்ச்சியால் ஒரு பலமற்ற மத்திய அரசாங்கம் சுதந்திர ஆச்சே இயக்கத்திற்கு ஒரு நன் மையை அளித்தது எனலாம். 1999 இல் துருப்புக்கள் திரும்பப் பெறப் படும் என்று அறிவிக்கப்பட்ட போதிலும், மோசமான பாதுகாப்பு நிலைமையால் மேலும் வீரர்களை மீண்டும் களத்தில் இறக்க வழிவகுத்தது. ஜனாதிபதி மேகாவதி சுகர்னோபுத்ரியின் பதவிக் காலத்தில் 2001-2004 துருப்புக்களின் எண்ணிக்கை 15,000 ஆக உயர்ந்ததாக நம்பப்படுகிறது.

1999 ஆம் ஆண்டு இந்தோனேசிய அர சாங்கத்திற் கும் ஆச்சே இயக்கத்துக்கும் இடையிலான முதல் பேச்சுவார்த்தை தொடங்கியது. இந்த செயல்முறை யானது மனிதாபிமான உரையாடல் மையம் என்ற ஒரு தனியார் இராஜதந்திர அமைப்பால் தொடங்கப்பட் டது, இது 2003 வரை இரு தரப்புக்கும் இடையே அமைதிப் பேச்சுக்களை நடாத்த எளிதாக்கியது.

2001 மற்றும் 2002 இல் நடந்த இந்தோனேசிய பாதுகாப்பு படையின் அடக்குமுறைகளால் பல ஆயிரம் பொது மக்கள் இறந்தனர். இம்மோதல்களால் 15,000 பேர் வரை கொல்லப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தோனேசிய ஆட்சியின் கீழ் சிறப்பு சுயாட்சியை ஏற்றுக் கொள்வதற்கு ஆச்சே இயக்கத் துக்கு இறுதி எச்சரிக்கையையும் அக்காலத்தில் விடுக்கப்பட்டது.

**சுனாமி 2004 பேரழிவு :**

ஆச்சே இயக்க அறிக்கை களின் மூலம், 2003-2005 அர சாங்கத் தாக்குதலின் போது அதன் இயக்க வலிமை யில் 50 வீதமாக இழந்தது என ஒப்புக் கொண்டது. 2004 ஆம் ஆண்டு சுனாமி பேரழிவு ஆச்சே மாகாணத்தை தாக்கியபோதும் கிளர்ச்சி தொடர்ந்து நடந்து கொண்டி ருந்தது.

டிசம்பர் 2004 இல் பேரழிவை ஏற்படுத்திய சுனாமிக்குப் பிறகு, ஆச்சே இயக்கம் ஒருதலைப்பட்ச மான போர்நிறுத்தத்தை அறிவித்தது, சர்வதேச சமூகத் தின் உறுப்பினர்கள் மோதலைத் தீர்க்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

சுனாமிக்குப் பிறகு, இந்தோனேசிய அரசாங்கம் ஆச்சே பகுதியை சர்வதேச நிவாரண முயற்சிகளுக்குத் திறந்தது. சுனாமியின் பின்னர் இவ் மோதல் சர்வதேச கவனத்தை ஈர்த்தது. முந்தைய சமாதான முயற்சிகள் பலவும் தோல்வியடைந்தன, ஆனால் சுனாமியின் பின் இரு தரப்பும் மோதலில் இராணுவ ரீதியாக வெற்றிபெற இயலாமை மற்றும், குறிப்பாக, இந்தோனேசியாவில் அமைதியைப் பாதுகாக்க ஜனாதிபதி சுசிலோ பாம்பாங் யுதோயோனோவின் விருப்பம் உட்பட பல காரணங்க ளால், ஒரு சமாதான உடன்படிக்கை எட்டப்பட்டது. இதன்மூலம் 2004 இந்தியப் பெருங்கடல் பூகம்பத்தின் விளைவுடன் ஆச்சேயில் 30 ஆண்டுகால மோதலை முடிவுக்குக் கொண்டு வந்தது.

**பின்லாந்து சமாதானப் பேச்சுவார்த்தை :**

29 வருட போருக்குப் பிறகு 2005. சுஹார்டோவிற் குப் பிந்தைய இந்தோனேசியா மற்றும் தாராளவாத-ஜனநாயக சீர்திருத்த காலம் ஆகும். அத்துடன் இந்தோ னேசிய இராணுவத்தில் பதவி மாற்றங்கள் சமாதானப் பேச்சுக்களுக்கு மிகவும் சாதகமான சூழலை உருவாக்க உதவியது. புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி சுசிலோ பாம்பாங் யுதோயோனோ மற்றும் துணைத் தலைவர் ஜூசுஃப் கல்லா ஆகியோரின் அமைதி தீர்வுக் கான பங்களிப்பு மிகவும் குறிப்பிடத்தக்கவை.

அதே நேரத்தில், ஆச்சே இயக்க தலைமை தனக்கு கிடைக்கக்கூடிய விருப்பங்களை மறுபரிசீலனை செய் தது, மேலும் இந்தோனேசிய இராணுவம் கிளர்ச்சி இயக் கத்தை கணிசமான அழுத்தத்திற்கு உட்படுத்தியது, இது ஆச்சே இயக்கம் முழு சுதந்திரம் இல்லாத முடிவை ஏற்றுக்கொள்ள ஊக்கப்படுத்தியது.

முன்னாள் பின்லாந்து ஜனாதிபதி மார்ட்டி அஹ் திசாரி தலைமையில், நெருக்கடி மேலாண்மை முன் முயற்சியால் சமாதானப் பேச்சுக்கள் எளிதாக்கப் பட் டன. இதன் விளைவாக அமைதி ஒப்பந்தம் 15 ஆகஸ்ட் 2005 அன்று கையொப்பமிடப்பட்டது. ஒப்பந்தத்தின் கீழ், இந்தோனேசியா குடியரசின் கீழ் ஆச்சே சிறப்பு சுயாட்சியைப் பெறுவார்கள் என அறிவிக்கப்பட்டது.

**ஹெல்சின்கி புரிந்துணர்வு ஒப்பந்தம்**

ஹெல்சின்கி அமைதி புரிந்துணர்வு ஒப்பந்த முடிவுகளால் மோதலுக்கு அமைதியான தீர்வு கிடைத்த தாக அறிவித்தனர். இதன்படி ஆச்சேவுக்கு சிறப்பு சுயாட்சி வழங்கப்பட்டது. ஆச்சே இயக்கத்தின் நிராயுத பாணியாக்கமும், ஆச்சே இயக்கத்தின் சுதந்திரக் கோரிக் கையும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. அத்துடன் அவசியமற்ற இந்தோனேசிய துருப்புக்கள் வெளியேற் றப்பட்டனர். இதன்பின் அமைதிக்கான ஆச்சே கண் காணிப்பு பணியகத்தால் பிராந்திய தேர்தல்களும் நடத் தப்பட்டது.

பல ஆண்டுகளாக விடுதலையை மூச்சாக கொண்டு போராடி ஆச்சே தேசம், கொடிய போரினால் சிந்திய குருதிகளுக்கும், சிதைவடைந்த தேசத்திற்கும் முற்றுப் புள்ளி வைக்க 2004 இந்தியப் பெருங்கடல் ஆழிப் பேரலை சுனாமியின் அழிவுகளும், ஆச்சே விடுதலைக் கான ஆயுத போராட்டத்தை நிறுத்த வழிகோலியது என்பது உண்மையே.

ஆழிப் பேரலையின் பாரிய அழிவினால் சர்வதேச மத்தியஸ்த்துடன் சமாதானத்தை ஏற்றுக் கொண்ட அச்சே தேச வரலாறு, விடுதலை வேண்டி போராடி அழிந்த மற்றய இனங்களுக்கும் சான்று பகரும் உதாராணமாக அமைகிறது எனலாம்.



# தாங்க முடியாத துயரோடு வாழும் வடமராட்சி கிழக்கு மக்கள்!

ஜெ. பானு
(அபிவிருத்தி உத்தியோகத்தர்,
வடமராட்சி கிழக்கு)



வடமராட்சி கிழக்கு மக்களின் பொருளாதாரத்தை முன்னேற்றுகின்ற கடலானது அள்ளிக்கொடுத்து அரவணைக்கும் தாயாக விளங்கிய கடலானது 2004 ஆம் ஆண்டு உயிர்களை கொன்றொழித்த எமனாக மாறிய அந்த நிகழ்வை காலங்கள் பல உருண்டோடினாலும் பாதிக்கப்பட்ட மக்கள் மறக்கவே மாட்டார்கள்.

சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து 19ஆண்டுகள் கடந்து சென்றிருந்தாலும் இறந்தவர்களின் நினைவுகளோடும் வலிகளோடும் கூடிய உள பாதிப்பிலும் பொருளாதாரத்தில் இருந்து மீள முடியாமலும் தான் இன்னமும் உறவுகள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆண்டுகள் பல கடந்து போனாலும் அதன் பாதிப்புக்கள் இன்னும் ஏதோவொரு வழியில் தொடர்கிறது. வடமராட்சி கிழக்கு, முல்லைத்தீவு கடற்கரைகளுக்கு சென்றால் கட்டிடங்கள் தரைமட்டங்களாகவும், இயற்கையில் செழித்திருந்த மரங்கள் தலை இல்லாமலும், பாலைவனங்கள் போன்றும் காட்சியளிக்கிறது. சுனாமி அனர்த்தம் ஒருபுறம் யுத்த அழிவு மறுபுறம் என இரண்டின் அழிவுகளும் ஏற்படுத்திய பாதிப்புக்கள் ஏராளம். அதுவரை காலமும் யுத்தத்தின் வடுக்களை சந்தித்த மக்களை இறுதியில் இயற்கை கூட விட்டு வைக்கவில்லை. பல குடும்பங்கள் இல்லாமல் போனார்கள். குடும்பத்தில் பல உயிர்கள் இழக்கப்பட்டன. குழந்தைகள் முதல் முதியவர் வரை பலரையும் கொத்துக் கொத்தாக காவு வாங்கியது பேரலைகள்.

மக்களுக்கு வருமானத்தை ஈட்டி பொருளாதாரத்தையே உயர்த்திய கடல் அலை பல உயிர்களை கொன்றொழித்து அங்கவீனர்களாக்கி பொருளாதார இழப்புக்களையும் சந்திக்க வைத்தது மட்டுமல்லாமல் கடற்கரையோர கிராமங்களையே இல்லாமல் ஆக்கிய துயர நிகழ்வை தமிழ் மக்களால் மறக்க முடியாத சோகத்தை ஏற்படுத்தியது.

2004 மார்கழி 26 அன்று காலை அந்த சோக சம்பவம் இடம்பெற்றது. இந்தோனேசியா சுமத்ரா தீவு அருகே ஆழ்கடலில் ஏற்பட்ட நில அதிர்வு காரணமாக எழுந்த பேரலைகள் தாய்லாந்து, இந்தோனேசியா, மலேசியா, இந்தியா, இலங்கை என பல நாடுகளில் பேரழிவை ஏற்படுத்தியது.

இலங்கையின் கரையோர மாவட்டங்கள் சுனாமி அனர்த்தத்தால் பாதிப்புக்களை சந்தித்தன. அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், காலி, களுத்துறை, மாத்தறை, அம்பாந்தோட்டை, கொழும்பு மாவட்டத்தின் கரையோரத்தின் சில பகுதிகள் பாதிப்பை சந்தித்தன. இவ் அனர்த்தத்தால் எமது நாட்டில் மட்டக்களப்பு - 2975, திருகோணமலை - 984, யாழ்ப்பாணம் - 1256, முல்லைத்தீவு - 2902, கிளிநொச்சி - 32 என மாவட்ட ரீதியாக உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை கணக்கிடப்பட்டது.

தமிழர் பகுதிகளில் ஆழிப்பேரலையில் ஏற்பட்ட அழிவு என்பது நினைத்துப் பார்க்க முடியாதளவு பேரழிவு. அதுவும் கரையோர மக்களின் பொருளாதாரத்தையும் அடியோடு ஆட்டம் காண செய்தது. ஆகையால் ஆழிப்பேரலை பற்றி அறிவியல் ரீதியான தேடலை மேற்கொள்ள வேண்டும்.

நீண்டகால யுத்தத்தை சந்தித்த 2002 ஆம் ஆண்டுக்கு பின்னர் சமாதானம் நிலவிக் கொண்டிருந்த காலப்பகுதியில் தான் சுனாமி என்ற இயற்கை அனர்த்தம் பல பாதிப்புகளை ஏற்படுத்தியது. இன்று 19 ஆண்டுகள் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு உருண்டோடினாலும் சுனாமி ஏற்படுத்திய பாதிப்புக்களை வடமராட்சி கிழக்கு கடற்கரைக்கு சென்றால் அவதானிக்க முடியும். உறவுகளின் வலியும் தொடர்கிறது. பிள்ளைகளை இழந்த பெற்றோரும் பெற்றோரை இழந்த பிள்ளைகளும் உறவுகளை இழந்த சொந்தங்கள் என துயரங்களில் வாழும் அவல நிலை தொடர்கிறது.

சுனாமி அனர்த்தம் தொடர்பான அறிவை இனியுள்ள காலங்களில் பெற வேண்டும். முற்கூட்டிய எச்சரிக்கை பெறுவதனை உறுதிப்படுத்த வேண்டும். சுனாமியின் பின்னர் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அரசாங்கம் உருவாக்கினாலும், இப்போது பெரும்பாலும் சுனாமி பற்றிய விடயங்கள் பெரும்பாலும் பேசப்படுவதில்லை. ஒவ்வோராண்டும் அஞ்சலிப்பதோடு எல்லாம் முடிந்து விடுகின்றன. கடலுக்கடியில் ஏற்படும் நிலநடுக்கத்தால் நீர் உந்தப்பட்டு மிகப்பெரிய அலைகளாக உருவாகி கரையை தாக்கி சேதங்களை ஏற்படுத்துவதே சுனாமி என்கின்றோம். சுனாமி என்ற சொல் ஜப்பான் மொழியில் இருந்து வந்தது. இதனை தமிழர்கள் ஆழிப்பேரலை என குறிப்பிடுகின்றனர். சிறிய உயரமுடைய அலைகள் சுனாமியால் பெரிய அலைகளாக மாறுகின்றன. சுனாமி ஏற்படும் போது கடற்கரையின் அலையின் உயரம் நிலநடுக்கத்தின் அளவுக்கு ஏற்ப இருக்கும். கரையில் இருந்து அதன் உயரத்திற்கு ஏற்ப கடல்நீர் தரைப்பகுதியினுள் ஊடுருவும் பின் இப்பெரிய அலைகள் தரையில் பரவிய இடத்திற்கு பின்னே தொடர்ந்து நீர் அலைகள் வேகமாக முன்னேறிக் கொண்டே இருக்கும். சுனாமியின் அலைகளின் உயரத்திற்கு ஏற்ப அதனால் ஏற்படும் சேதங்களும் காணப்படும். சுனாமி அலைகளின் தாக்கத்திற்கு பின் அந்த தரைப்பகுதியில் மாற்றங்கள் காணலாம். கடல் நீர் சுனாமி அலையின் மூலம் இடம் பெயர்ந்ததனால் முன்னர் நிலப்பகுதியாக இருந்தவை நீராகவும் நீர்ப்பகுதியாக இருந்தவை நிலமாகவும் மாறுவதற்கு வாய்ப்புள்ளது.

கி.மு 426 கிரேக்க வரலாற்றாசரியர் தியுசிடைட்ஸ் சுனாமி ஏற்படுவதற்கான காரணங்களை “பிலோப்போனேசியப் போர் வரலாறு” என்ற புத்தகத்தில் கூறியுள்ளார். அவர் தான் முதன் முதலில் கடலில் நிலநடுக்கம் ஏற்பட்டது என்றும் எந்த இடத்தில் நிலநடுக்கம் கடலில் உண்டானதோ அங்கு கடல் உள்வாங்கும், பின்பு திடீர் என பின் வாங்குதலும், மறு இரட்டை சக்தியும் கொண்ட வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது. நிலநடுக்கம் ஏற்படாமல் இப்படி ஒரு விபத்து ஏற்பட வாய்ப்பே இல்லை என குறிப்பிட்டார்.

கி.பி 365 இல் அலெக்சாந்திரியாவில் மிகப்பெரிய அழிவுக்கு பின் ரோமன் வரலாற்றாசிரியர் அம்மியனஸ் மாசில்லினுஸ் சுனாமி என்பது நிலநடுக்கத்தில் தொடங்கி கடல் நீர் பின்னடைவு அதைத் தொடர்ந்து ராட்சத அலை என்ற தொடர்ச்சியான நிகழ்வாக அமைகிறது என்றார். அதாவது நிலநடுக்கம் என்பது நிலப்பகுதியில் கடல்பகுதியில் மலைப்பகுதியில் வந்தால் நிலத்தில் உள்ளவை அதிர்ந்து சேதமாகிறது. கடலில் வந்தால் கடலின் ஆழமான பகுதியில் உள்ள நிலத்தட்டுக்களின் அசைவு பெரிய அலைகளாக உருவாகின்றது. பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு ஒரே நிலத்தட்டுத்தான் இருந்தது. ஆனால் கண்டங்களாக பிரிய, பிரிய அதன் தட்பவெப்ப இயற்கை சூழ்நிலைகளுக்கு ஏற்ப பல்வேறு நிலத்தட்டுகள் உருவாகின. இந்த தட்டுக்களின் மீது ஒவ்வொரு கண்டமும் இருக்கின்றன. நிலம், கடல் எல்லாவற்றையும் தாங்கி நிற்பது இந்த நிலத்தட்டுக்கள் தான். இதைத்தான் “டெக்டானிக் பிளேட்கள்” என்று புவியியல் நிபுணர்கள் கூறுகின்றனர். ஆராய்ச்சியாளர் கூற்றுப்படி கி.மு 365 ஆம் ஆண்டு யூலை 21 ஆம் திகதி கிழக்கு மத்திய தரைக்கடலில் தோன்றி எகிப்திய அலெக்சாண்டிரியாவில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக கூறுகிறார்கள். அன்றைய காலத்திலே சுனாமி பற்றி விரிவாக கூறியுள்ளார்கள். அதைவிட சுனாமி அனர்த்தம் பல நாடுகளில் ஏற்பட்டுமுள்ளன. ஏப்ரல் 1946 இல் அலாஸ்காவில் சுவேடன் தீவுகளுக்கு அருகில் 7.8 ரிக்டர் அளவுக்கு பூகம்பம் ஏற்பட்டது. இதனால் 14 மீற்றர் உயரத்திற்கு அலைமேலே எழுந்து வளவாய் தீவில் உள்ள ஹிலோ என்ற இடத்தை அழித்தது. இவ்வாறு பல நாடுகளில் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டது.

நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட இலங்கை சுனாமி தொடர்பான அறிவை சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட நாடுகளிலிருந்து தெளிவான அறிவை 2004 ஆம் ஆண்டுக்கு முதலே பெற்றிருக்க வேண்டும். ஒரு அனர்த்தம் நிகழாது என கருதுவது மடமைத்தனம். எந்த அனர்த்தம் நிகழ முதலே அது தொடர்பான அறிவை பெற்று மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்க வேண்டும். சுனாமி எச்சரிக்கை கோபுரங்கள் போன்ற கருவிகளை முதலே பூட்டியிருந்தால் பல ஆயிரம் உயிர்களையும் பாதிப்புக்களையும் கூடியளவு தவிர்த்திருக்க முடியும். “வெள்ளம் வரும் முன் தான் அணை கட்ட வேண்டும்” என்பது போல் பாதிப்புக்கள் ஏற்பட முன் அது தொடர்பான அறிவூட்டலை பெற்றிருக்க வேண்டும். 2004 சுனாமி ஏற்பட்ட நேரம் இலங்கை இரண்டு பிரிவுகளாக காணப்பட்ட வடக்கு கிழக்கு பெரும்பாலான பிரதேசங்கள் விடுதலைப் புலிகள் வாழும் மிச்சப்பகுதி இலங்கை இராணுவத்திடமும் காணப்பட்டன. இச்சுனாமி அனர்த்தத்தால் இலங்கையின் கடற்கரையோர பிரதேசங்கள் அனைத்திலும் அதிக சேதத்தை ஏற்படுத்தியது. 2004 ல் இந்திய பெருங்கடலில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் 230,000 மக்கள் உயிரிழந்தனர். சுமத்ரா பகுதியில் அடிக்கடி நிலநடுக்கங்கள் ஏற்படுவதனால் அங்கு சுனாமி ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம். 2004 ஆம் ஆண்டில் மார்கழி 26 ஆம் நாளன்று யுரேஷியன் நிலத்தட்டின் ஒரு பகுதியாக கருதப்படும் பர்மா நிலத்தட்டும் இந்தோ - ஆஸ்ரேலியன் நிலத்தட்டின் ஒரு பகுதியாகிய இந்தியன் நிலத்தட்டும், இந்தோனேசியாவில் வடக்கே சுமந்திரா தீவில் கடலுக்கடியில் மோதியது. அதனால் ஏற்பட்ட பூகம்பத்தால் தோன்றிய அலைகள் தான் இந்திய பெருங்கடலில் சுனாமியை ஏற்படுத்தியது. 2004 ஆம் ஆண்டில் மிகப்பெரிய ஒரு இயற்கை அழிவு 2004 சுனாமி அனர்த்தத்தின் பின் இந்திய பெருங்கடலில் சுனாமி எச்சரிக்கை அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. தமிழர் தாயகத்தில் சுனாமிக்கு பின்னரான விடுதலைப் புலிகளின் மீட்பு நடவடிக்கைகளை உலகின் பல பத்திரிகைகளும் பாராட்டி எழுதி இருந்தன. விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் பேரழிவுக்கு பின்னர் தனது அனுதாப செய்தியொன்றை வெளியிட்டார். “ஆற்ற முடியாத துயரத்தாலும் வேதனையிலும் துடிக்கின்ற உலக மக்களிற்கு எமது அன்பையும் ஆறுதலையும் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன். அது போலவே தமிழ் பேசும் தாயக மண்ணிலும் தென்னிலங்கை கடலோர பகுதிகளிலும் தமது உற்றார் உறவினரை பலிகொடுத்த ஆறாத துயரிலும் ஆழ்ந்திருக்கும் இஸ்லாமிய, சிங்கள சகோதரர்களிற்கு எனது ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகுக. தென்னாசிய நாடுகளிலும் இந்தியாவிலும் குறிப்பாக தமிழ் நாட்டிலும் உயிரிழப்புக்களை சந்தித்து துயருறும் மக்களின் சோகவுணர்விலும் பங்கு கொண்டு எமது ஆழ்ந்த கவலையை தெரிக்கின்றேன்.” குறித்த அனுதாப செய்தியை வெளியிட்ட பின் தாயகத்தில் என்னென்ன உதவிகள் மக்களிற்கு செய்ய வேண்டுமோ அவற்றை தாராளமாகவே செய்யுமாறு போராளிகளுக்கும் தளபதிகளுக்கும் பணித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது. பண்டைய காலத்தமிழர்கள் கடற்கரைகளில் கடல்சார் மரங்கள் உள்ளிட்ட இயற்கை பேரிடர் தடுப்புகளை பாதுகாப்பு அரணாக அமைத்து ஆழிப் பேரலைகளின் பாதிப்புக்களை குறைத்தார்கள். சங்ககால இலக்கியங்களில் இதற்கான ஆதாரங்கள் காணப்படுகிறது. எமது பிரதேச கடற்கரைகளில் கரையோரங்களில் வளரும் தாளை மரங்கள் போன்றவற்றை வைத்து இயற்கை அனர்த்தத்தின் வலிமையை குறைப்பதற்கான செயற்திட்டங்கள் மிக குறைவென்றே கூறலாம். கடற்கரை பகுதிகள் பெரும்பாலும் மரங்கள் இல்லாமல் வெட்ட வெளியாக காணப்படுகிறது. ஒவ்வொரு பிரதேச ரீதியாக கவனத்தில் எடுத்து மரங்கள் வைக்கப்பட்டு அதை பராமரிக்க வேண்டும். இதனால் எதிர்காலத்தில் இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டாலும் பெருமளவான பாதிப்புக்களை குறைக்க வாய்ப்பாக இருக்கும். இதை உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுக்க வேண்டும். எமது நாட்டில் சுனாமி எச்சரிக்கை கோபுரத்திலிருந்து எச்சரிக்கை அலாரம் ஒலித்தவுடன் மக்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது தொடர்பாக விழிப்புணர்வு பிரதேசசெயலகம், தன்னார்வ தொண்டர்கள், முப்படையின் பொலிஸ் ஒத்துழைப்புடன் கிரமமான முறையில் இடம்பெற வேண்டும். இதனால் மக்கள் எப்போதும் விழிப்புணர்வுடன் செயற்படுவார்கள். சுனாமியில் உயிர்நீத்த உறவுகளுக்கு உடுத்துறை சுனாமி நினைவாலயம் அமைத்து அவர்கள் நினைவு கூரப்படுகிறார்கள். அதேபோல் முல்லைத்தீவு, மட்டக்களப்பு போன்ற நாட்டின் பல பகுதிகளின் உயிர்நீத்த உறவுகள் நினைவு கூறப்படுகின்றார்கள்.